பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 4 செவ்வாய்க்கிழமை (20.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :298

# நவம்பர் 17இல் ஜனாதிபதித் தேர்தல்

# ஒக்டோபர் 7இல் வேட்பு மனு தாக்கல்

## வர்த்தமானி அறிவித்தலை வெளியிட தேர்தல்கள் ஆணையாளர் பணிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 20

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பில் பல வாரகாலம் நீடித்துவந்த சர்ச்சைக்கு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

இவ்வாண்டில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடத்தத் தீர்மானித்திருக்கும் தேர்தல் ஆணையாளர், அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான பணிப்புரையை நேற்று பிறப்பித்திருக்கிறார். தேர்தல் ஆணையாளரின் தீர்மானத்தின்படி ஒக்டோபர் ஏழாம் திகதி இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கப் படவுள்ளன.

தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏழாம் திகதி காலை ஒன்பது மணிக்கும் பதினொரு மணிக்குமிடையில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆறாம் திகதியன்று கட்டுப் பணத்தை செலுத்தவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியற் கட்சியொன்றின் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாவையும், சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர் 75 ஆயிரம் ரூபாவையும்கட்டுப்பணமாகச்செலுத்தவேண்டும்.

தேர்தல் ஆணையாளரின் இந்தப் பணிப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்திரேலியாவில் எழுச்சி நிகழ்வு

மெல்பேர்ன்,செப்.20

தமிழர் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் எழுச்சி நிகழ்வு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

தென்துருவ தமிழ்ச்சங்கங்களின் சம்மேளனம் இதற்கான ஏற்பாட்டை மேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நாளை கதவடைப்பு

திருகோணமலை, செப். 20

திருகோணமலையில் நாளை பூரண கதவடைப்பு நடத்துமாறு திருகோணமலை மாவட்டம், பொங்கு தமிழ்ச் சமூகத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இராணுவ ஆக்கிரமிப்பை ஆட்சேபித்தும் ஏனைய பல கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தக் கதவடைப்புக்கு அழைப்பு விடுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மண்டூரில் இளைஞர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,செப்.20

மட்டக்களப்பு மண்டூர்ப் பகுதியில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றுமாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மாலசூரன் விமலேஸ்வரன் (வயது 23) என்ற இளைஞரே பலியானார்.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

## ஜே.வி.பி. - ஹெல உறுமய இடையேயான இழுபறியில் சிக்கிப் பிரதமர் மஹிந்த திணறல்!

கொழும்பு, செப்.20

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக ஜாதிக ஹெல உறுமயவுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதன் காரணத்தினால் இப்போது பெரும் தர்ம சங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

ஜாதிக ஹெல உறுமய தொடர்பில் ஜே.வி.பி. கொண்டிருக்கும் நிலைப்பாடும், ஜே.வி.பியினரால் இதுவிடயத்தில் வழங்கப்படும் மறைமுக எதிர்ப்பும் அழுத்தமுமே பிரதமரின் இந்த தர்மசங்கடமான நிலைக்குக் காரணமெனத் தெரிகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தை இன்று ஆரம்பிக்கிறார் மஹிந்த

கொழும்பு, செப். 20

ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின் முதலாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான முதலாவது பிரசாரக் கூட்டம் இன்று பிற்பகல் கொழும்பு நகரசபைத் திடலில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறிய ஜே.வி.பி.முக்கியஸ்தர்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்களுடன் ஒரே மேடையில் தோன்றவிருக்கின்றனர். இன்றைய கூட்டத்திற்கு நாடளாவிய ரீதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டி அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதமர் மஹிந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியில் காவலில் உள்ள

## 3 பொலீஸாரையும் சந்திக்க இன்று உறவினர்கள் கிளிநொச்சிக்கு!

கிளிநொச்சி, செப்.20

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மூன்று இலங்கைப் பொலீஸாரையும் பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் இன்று கிளிநொச்சி வருகின்றனர்.

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த சமயம் கடந்த 9ஆம் திகதி தமிழீழக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட மூன்று இலங்கைப் பொலீஸாரும் தமிழீழ நீதிமன்றத்தின் உத்தரவுப்படி

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர்

## முக்கிய அமைச்சர் ஒருவர் ஐ.தே.கவில் இணைகிறார்?

கொழும்பு, செப்.20

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசில் அங்கம் வகிக்கும் முக்கியமான சிரேஷ்ட அமைச்சரொருவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வாரென்று மிக நம்பகரமாகத் தெரியவருகிறது.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இந்த அமைச்சர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினராக, இருந்தவராவார். ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடன் உடன்பாடுகளைச் செய்திருப்பதையிட்டு கடும் அதிருப்தியடைந்திருக்கும் இந்த அமைச்சர், இதுகுறித்து தனது வெறுப்பை கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம், இந்தச் சூழ்நிலையில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதற்காக அவர் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் மந்திராலோசனை நடத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

### தனியார் செய்தி நிறுவனத்துக்குரிய

## முல்லை. எழுச்சி விழா பற்றிய ஒளிபரப்பு நாடா பறிமுதல்!

### பலாலியில் படையினர் நடவடிக்கை

கொழும்பு, செப்.20

முல்லைத்தீவில் கடந்த [illegible]ஆம் திகதி நடைபெற்ற தமிழர் உரிமைப் பிரகடன மாநாடு தொடர்பான நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்த வெளிநாட்டு தமிழ் ஒளிபரப்பு நிலையம் ஒன்றின் ஒளிப்பதிவு நாடாக்களை தடுத்து வைத்திருக்கிறது இலங்கை விமானப்படை.

முல்லைத்தீவு உரிமைப் பிரகடன மாநாட்டில் எடுத்த ஒளிப்பதிவு நாடாக்களை கொழும்பில் உள்ள தனது பிராந்திய அலுவலகத்துக்கு தனியார் விமான சேவை மூலம் அனுப்புவதற்கு அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்ததாகவும்-

அவ்வாறு தனியார் விமான சேவை நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்ட ஒளிப்பதிவு நாடாக்களையே பலாலியில் வைத்து விமானப் படையினர் தடுத்து வைத்தனர் எனவும் - கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட ஒளிப்பதிவு நாடாவில் சர்ச்சைக்குரிய விடயங்கள் உள்ளவை என்பதைத் தீர்மானிப்பதற்காக அது தேசிய புல

(16ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் ஒருவர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா, செப்.20

வவுனியா நகரில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் வவுனியா - மன்னார் வீதியில் பட்டைக்காடு என்ற இடத்தில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

செல்லத்துரை சிவானந்தராசா (வயது-45) என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# பொங்குதமிழ் ஏற்பாடுகள் பாரிய அளவில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை சிறப்பாக முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடுப்பட்டுள்ளன. வன்முறையற்ற, அமைதியான வழியில் தமிழினத்தின் அபிலாசைகளைச் சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டும் பாரிய பொறுப்பு பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் தங்கி உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

பொங்கு தமிழ் ஏற்பாடு குறித்த கலந்துரையாடல்கள் சதுமலை முன்பள்ளி, மானிப்பாய் விக்ஸ்மன் கல்வி நிறுவனம், மானிப்பாய் வளர்மதி முன்பள்ளி, காரைநகர் ஐடியல் அக்கடமி என்பவற்றிலும் -

இளவாலை விளையாட்டுக் கழகம், வலிகாமம் தென்மேற்கு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிலும் - இடம்பெற்றன.

கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட அங்கத்தவர்கள் பொங்குதமிழ் சிறப்புற எழுச்சியுடன் நடத்துவதற்கு முழுமூச்சுடன் ஆதரவளிப்பதாக உறுதிபூண்டனர் என்றும்-

பொங்கு தமிழுக்கு மக்களை அணிதிரளக்கோரி குடாநாட்டில் ஒலிபெருக்கி மூலமான பிரசாரங்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# உயர்கல்வி, ஆசிரிய மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம்

யாழ்ப்பாணம்,செப்.20

'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு குறித்து யாழ். பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி, கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலைகள் ஆகியவற்றின் மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்கள் தென்மராட்சிப் பகுதியிலும், விஞ்ஞானபீட மாணவர்கள் வடமராட்சிப் பகுதியிலும், விவசாயபீட மாணவர்கள் அச்சுவேலி மற்றும் கோப்பாய்ப் பகுதியிலும், மருத்துவபீட மாணவர்கள் நல்லூர் மற்றும் யாழ்ப்பாணப் பகுதியிலும் -

கல்வியியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் -

பொங்குதமிழ் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை - விசேடமாக வடிவமைக்கப்பட்ட பெரிய அளவிலான பொங்குதமிழ்ப் பானை நேற்று யாழ். நகரப் பகுதியில் வலம் வந்தது.

இத்துடன், மேலும் இரண்டு 'பொங்கு தமிழ்' பானைகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. அவை இன்று தமது பயணங்களைத் தொடரவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழ் மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். (ஒ-12-ரி)

# தீவகத்தில் பிரசாரம் ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள் பொங்குதமிழ் பிரசார நடவடிக்கையை இன்றுமுதல் தீவகத்தில் ஆரம்பிக்கவுள்ளனர். இதேவேளை, வேலணையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்றுகூடி பொங்குதமிழ் ஏற்பாடு குறித்துக் கலந்துரையாடினர்.

மற்றொரு நிகழ்வில் தீவகத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், வலயக்கல்வி அதிகாரிகள் ஆகியோர் பொங்குதமிழ் பங்களிப்புப் பற்றி ஆலோசனை நடத்தினார்கள்.(ஒ)

# வடமராட்சி எழுச்சிப் பேரவை உறுப்பினர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.20

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் ஏற்பாடு குறித்து வடமராட்சிக் கோட்டதேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ளது. நெல்லியடி மத்திய கல்லூரிக்கு அருகில் இயங்கும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் வடமராட்சி தொடர்பகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறும்.

தமிழ் இனத்தின் அதியுயர் இலட்சியமான விடுதலையின் தாற்பரியத்தை சர்வதேச உலகிற்கு எடுத்துக் கூறவும் -

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குப் பலம் சேர்க்கும் வகையிலும் எதிர்வரும் 30 ஆம் திகதி பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெற உள்ளது.

இதற்கு மக்களை அணி திரட்டும் பிரசார நடவடிக்கைகள் குடாநாடெங்கும் முடுக்கி விடப்பட்டடுள்ளன. இந்த பொங்கு தமிழ் நிகழ்வில் 3 லட்சம் மக்கள் அணி திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்விற்கான ஏற்பாட்டு நடவடிக்கையாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட பல இடங்களிலும் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. அது மட்டுமல்லாது இப்பகுதியிலுள்ள மக்களுக்கு விழிப்பூட்டும் முகமாக வீடு வீடாகச் சென்று பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஒ-410)

# சூரியனைச்சுற்றி திடீர் ஒளிவட்டம்



நேற்றுமுற்பகல் 11 மணியளவில் இந்தியாவில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சூரியனைச் சுற்றி திடீரென்று ஒளி வட்டம் தெரிந்தது. இது குறித்து திருச்சி கோளரங்க இயக்குநர் மாதவன் கூறுகையில், வளிமண்டலத்தில் அவ்வப்போது காணப்படும் அபூர்வ நிகழ்ச்சியில் இதுவும் ஒன்று. சூரியனைச் சுற்றி காணப்பட்ட ஒளிவட்டத்தால் பூமிக்குப் பாதிப்பு எதுவும் இல்லை. இது மேகக் கூட்டங்களால் ஏற்படும் அரிய நிகழ்ச்சியாகும், என்றார். (ஒ)

# கதிர்காமரின் இடத்துக்கு ஜயந்த தனபால

கொழும்பு,செப்.20

முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலையுண்டதனால் நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள காலியான இடத்திற்கு சமாதானசெயலகத்தின்செயலாளர்நாயகம்ஜயந்த தனபால நியமிக்கப்படலாம் என்று ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கதிர்காமர் மறைவால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு ஒருவர் நியமிக்கப்படவேண்டிய தன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. (ப)

# சோசலிஸ சமத்துவக் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பு

கொழும்பு,செப்.20

ஜனாதிபதித் தேர்தலில் சோசலிஸ சமத்துவக் கட்சியும் களம் இறங்குகின்றது. கட்சியின் பொதுச் செயலாளரும், உலக சோசலிஸ வலைத் தளத்தின் சர்வதேச ஆசிரியர் குழுவின் உறுப்பினருமான விஜே டயஸ் கட்சியின் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார் என அக்கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஸ்ரீல.சு.கட்சி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.தே.க. வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிடுகின்றனர். இப்பொழுது மூன்றாவது நபராக சோசலிஸ சமத்துவக் கட்சி வேட்பாளராக விஜேடயஸ் களம் இறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பும் இத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்திருப்பது தெரிந்ததே. (க)

# சுகாதாரம் பேணாத வெதுப்பகத்திற்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

சுகாதாரம் பேணப்படாமை தொடர்பாக யாழ். நகரப்பகுதியில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றின் உரிமையாளர் மீது தொடரப்பட்ட வழக்கில், சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுக்காலை யாழ். நீதிமன்றத்தில், யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்போது குற்றஞ்சாட்டப்பட்ட வெதுப்பக உரிமையாளர், தான் சுற்றவாளி என நீதிவானிடம் தெரிவித்தார். இதனையடுத்து, யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சகிதம் சம்பந்தப்பட்ட வெதுப்பகத்தை நேரில் சென்று பார்வையிட்டார். அதன் பின்னர் வெதுப்பகத்தின் சுகாதாரம் திருப்திகரமாகப் பேணப்படவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து யாழ். மேலதிக நீதிவானால் சம்பந்தப்பட்ட வெதுப்பக உரிமையாளருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அத்துடன, வெதுப்பகத்தில் திருப்திகரமாக சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கையை மேற்கொள்ள கால அவகாசமும் வழங்கினார். (ஒ-12)

# தனியே இருந்த பெண்மணியை தாக்கிவிட்டு நகைகள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.20

வீட்டில் தனியாக இருந்த பெண்மணியை மண்வெட்டியால் தாக்கிக் காயப்படுத்திவிட்டு அவரணிந்திருந்த நகைகளை அபகரித்த திருடர்கள் தலைமறைவாகினர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இணுவில் கிழக்கு மத்திய கல்லூரி வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எஸ்.வத்சலா (வயது 59) என்ற பெண்ணே பாதிக்கப்பட்டார்.

வீட்டில் தனியாகத் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த இப் பெண்மணியை திருடர்கள் தாக்கி நகைகளை அபகரித்தனர் என்று கூறப்படுகின்றது.

சாய்மனைக் கட்டிலில் இரத்தக்காயத்துடன் கிடந்த இவரை தற்செயலாக அங்குசென்ற உறவினர் ஒருவர் கண்டு, அயலவர்கள் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளார். இப்பெண்மணி அவசரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். (ஒ-12-ரி)

## விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம்,செப்.20

பருத்தித்துறை ஓராம்கட்டைப் பகுதியில் நேற்று மதியம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த சற்குணம் சிறிதரன் (வயது 33) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார். (ஒ-12-ரி)

## கட்டுரை, பேச்சு போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பாட சாலை மாணவர்களுக்கு யாழ். மாநகர சபை யினர் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

கட்டுரைப்போட்டி நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் -

பேச்சுப்போட்டி நாளைமறுதினம் வியாழக்கிழமை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. (ஒ-9)



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் இலங்கை வங்கி சார்பில் கௌரவிக்கப்பட்டனர்.

கணிதத்துறையில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற சிவப்பிரகாசம் மயூரனுக்கு இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் பரிசுவழங்குவதையும் - சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுடன் கல்லூரி அதிபர் அ.ஸ்ரீகுமரன் மற்றும் வங்கி அதிகாரிகள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# விடுதலைப் போராட்டத்துக்கு ஊக்க சக்தி வழங்கும் பிரதமர்

*நாடு இரண்டாகப் பிரியவேண்டுமா அல்லது ஐக் கிய இலங்கைக்குள் அனைத்து இன மக்களும் ஒற்றுமை யுடனும் சமாதானத்துடனும் வாழவேண்டுமா? இதைத் தீர்மானிக்கப்போவது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தான்.*

- இப்படி யதார்த்தத்தை எடுத்துக் கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க. கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர் தரப்பின் சில உண்மையான நிலைப்பாடுகளை இந்தக் கூட்டத்தில் பகிரங்கப்படுத்தவும் அவர் தவறவில்லை.

*✱ இரண்டு தசாப்தங்களுக்கு மேல் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வு - நியாயமான தீர்வு - முன்வைக்கப்படாததாலேயே விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தனர்.*

*✱ தனிநாட்டுக் கோரிக்கையை விட்டு ஓர் அங்குலம் கூட கீழே இறங்கமுடியாது என அடம்பிடித்த புலிகள் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய்வதற்கு இறங்கி வந்ததே பெரிய காரியம்தான்.*

*✱ சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு இல்லவே இல்லை என்பதைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாம் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் 'ஒற்றையாட்சி முறையின் கீழ் மட்டுமே தீர்வுகாணப்படும்' - என்று எழுத்தில் கொடுத்ததன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றார். அப்படியானால் - சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு இல்லை என்றால் - புலிகள் மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கைக்கே சென்று விடுவர். இதனால், நாட்டில் மீளவும் யுத்தம் வெடிக்கும். பட்டினி யுகத்திற்கே நாடு பின்தள்ளப்படும். இரத்தக்களரியும் ஏற்பட்டு நாட்டில் அமைதி சீர்குலையும்.*

- இவ்வாறு உண்மை நிலையை அம்பலப்படுத்தியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

சிறுபான்மை இனத்தவர்கள் தமிழர்கள். அவர்களுக்கு விரோதமான பெரும்பான்மைச் சக்திகளை - பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குடைய பேரினவாதிகளை - தமக்குப் பின்னால் அணி திரட்டுவதன் மூலம் இலகுவாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிவிடலாம் என்று கணக்குப் போடுகின்றார் அரசுத்தரப்பு அணியினரின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால், அரசியல் சுயலாபத்துக்காக அவர் தீட்டும் இந்தச் சதி நடவடிக்கை நாட்டின் - இலங்கைத்தீவின் - எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கி, முழு நாட்டையுமே பெரும் இரத்தக்களரிக்குள் மீண்டும் ஆழ்த்தப் போகின்றது.

அதுமட்டுமல்ல.

நியாயமான தீர்வு ஒன்றைத் தமிழர் தரப்புக்கு வழங்க மறுப்பதன் மூலம் தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கை நியாயமானதே என்ற நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் கொள்வதற்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பேரினவாதக் கட்சிகளோடு செய்துகொண்ட ஒப்பந்தம் உதவப்போகின்றது என்று சுட்டிக்காட்டுகிறார் ரணில்.

அதாவது, பிரதமர் மஹிந்தவின் நடவடிக்கை நாட்டில் போருக்கு மட்டும் வழிசெய்யவில்லை. சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்தையும் - உரிமைக்கான உறுதிக் குரலையும் - நியாயப்படுத்தப் போகின்றது என்று சுட்டிக்காட்டுகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

மேலும் விளக்குவதாயின் - நாட்டில் யுத்தத்துக்கு மட்டுமல்ல, அதன்மூலம் நாடு பிளவுபடுவதற்கும் உதவப் போகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்று குற்றம் சுமத்துகின்றார் ரணில் விக்கிரமசிங்க. அதில் அர்த்தம் நிறைய உண்டு.

ஈழத்தமிழர்கள் தமது மூன்று தசாப்தகால விடுதலைப் போராட்டத்தின் இறுதி இலக்கை நோக்கி நகர்வதற்கு இன்று தடையாக இருப்பது சர்வதேச அழுத்தம்தான். தமக்கென தனியான ஓர் அரசுக்குரிய கட்டுமானங்களைத் தமது தாயகத்தில் ஏற்படுத்திவிட்டு, தனியான ஒரு நிழல் அரசையும் நிர்வாகக் கட்டமைப்பையும் உருவாக்கிய பின்னர், தனியான நாட்டுக்கான தயார்நிலையில் காத்திருக்கின்றார்கள் தமிழர்கள். என்றாலும், அந்த வழியில் தமிழர்களை முன்னேறவிடாது தடைபோட்டு நிற்கிறது சர்வதேச சமூகம். பிரிவினையைக் கைவிட்டு, ஐக்கிய இலங்கைக்குள் பேச்சு மூலம், அமைதி வழியில், அதிகாரப் பகிர்வு வாயிலாக, இணக்கத் தீர்வு ஒன்றைக் காணுங்கள் என்று வலியுறுத்தி நிற்கிறது உலக சமுதாயம்.

ஆனால், அவ்வாறு அமைதி வழியில் - அதிகாரப் பகிர்வு மூலம் - தீர்வு காண்பதற்கான வாய்ப்புகளை, சிங்கள - பௌத்த பேரினவாதிகளுடன் சேர்ந்து ஒரேயடியாக அடித்து மூடும் கைங்கரியத்தைச் செய்கிறார் பிரதமர் மஹிந்த. அதன்மூலம், ஈழத்தமிழர்கள் தமது இறுதி இலக்கை அடைவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய சர்வதேச அழுத்தத்தை விலக்குவதற்கும் வழி செய்கிறார் அவர்.

இந்த வகையில் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை - தனது சுயலாப அரசியலுக்காகப் பேரினவாதிகளை அணி சேர்க்கும் பிரதமர் மஹிந்தவின் பிற்போக்குத்தனமான நடவடிக்கை - அவர்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் இறுதி இலக்கை அடைவதற்கான எத்தனத்துக்கும் உந்து சக்தியாக - ஊக்க சக்தியாக - அமையப்போகிறது. இதுதான் நிஜம்.

# திலீபனின் கனவு நனவாகும் சூழல் நெருங்கி வருகிறது

## பயிற்சிப் பாசறை நிறைவு நிகழ்வில் கேணல் சூசை தெரிவிப்பு

வடமராட்சி கிழக்கு,செப்.20

பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் லெப்.கேணல் தியாகிதிலீபன் கூறிய வார்த்தைக்கு இன்று வலுச் சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. திலீபனின் கனவு நனவாகும் சூழ்நிலை இன்று நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

- இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்று வெளியேறிய கடற்புலிகளின் மூன்றாவது தொகுதி துணைப்படை வீரர்களின் பயிற்சிநிறைவு நிகழ்வு கடந்த சனிக் கிழமை வடமராட்சி கிழக்கு, ஆழியவளைப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே கேணல் சூசை இவ்வாறு தெரிவித்தார்.

கேணல் சூசை தமது உரையில் மேலும் தெரிவித்தாவது:

தேசியத் தலைவரின் தீர்க்கமான திட்டமிடலும், படைக்கட்டமைப்பும் படைக் கட்டமைப்புக்குத் துணை கொடுக்கின்ற துணைப்படை வலைப்பின்னலும் இன்று பல வெற்றிகளைத் தேடித்தந்துள்ளன.

தரையிலும் சரி, கடலிலும் சரி அடிக்கு அடி, பழிக்குப் பழி என பல வெற்றிகளைக் குவித்து துரித வளர்ச்சியினைப் பெற்றுவந்த விடுதலைப் புலிகள், கடந்த மூன்றரை வருடங்களாக அமைதியைப் பேணி வருகின்றார்கள். அதாவது, முடக்கப்பட்டு உள்ளார்கள்.

தென்னிலங்கையிலே இன்று போருக்கு அறைகூவும் அரசியல் தலைமைகள் கூட்டுச் சேர்ந்துள்ளன. இந்தக் கூட்டின் எதிர்த்தரப்பார் என்ன செய்வார்கள் என்பதும் தலைவருக்குத் தெரியும். அவரின் ஆழமான பார்வை - தீர்க்க தரிசனம் கடற்புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

தலைவரின் சிந்தனைக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வடிவம் கொடுக்கப்பட்டு இவ்வாறான பயிற்சிகள் வழங் கப்பட்டுவருகின்றன. இனிமேல் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவப் பாய்ச்சல்கள் குறுகிய காலத்தில் வெற்றியைப் பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கிலேயே எமது நகர்வுகள் ஒவ்வொன்றும் தலைவரால்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



சமாதானத்தைக் கொண்டு வரும் எண்ணம் அரசிற்கு இல்லை. அரசியல் கதிரைகளில் இருக்கும்போது நேரத்திற்கு நேரம் ஒரு கதை சொல்லிக் கொண்டு சர்வதேசத்தையும் ஏமாற்றிக் கொண்டு தங்களது படைப் பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றனர். ஸ்ரீலங்கா அரசுத் தலைமை எமக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவிகளைத் தடுத்துநிறுத்தும் பிரசார நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றது.

மேலும் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வசிக்கும் எமது உறவுகள் பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்துவதற்கு முன்வரவேண்டும். இதன்மூலம் போராட்டத்தினை வலுப்படுத்திக் கொள்ளமுடியும் - என்றார்.

தமிழீழ துணைப்படை வீரர் சேகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றினார். மறவன் மாஸ்டரின் திருவுருப்படத்திற்கு அவரது உறவினர்கள் மலர்மாலை அணிவித்தனர். தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு தளபதி (சலீம்) கலாத்தன் மலர் மாலை அணிவித்தார். போட்டிகளில் வெற்றியீட்டிய துணைப்படை வீரர்களுக்கு கேணல் சூசை பரிசில் வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தளபதிகள், போராளிகள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(எ-182)

# பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்துக்கான குடிதண்ணீர் வழங்கல் பணிகள் பூர்த்தி

வலி.தென்மேற்கு,செப்.20

பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்தில் நிலவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்ட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்ட ஏழு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதியும் வலி.தென்மேற்குப் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதியும் இந்த குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி குடிதண்ணீர் வழங்கும் திட்டம் விரைவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும் என வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தெரிவித்தார்.

(எ-135)

## உதயவாக்கு

ஒருவன் எவ்வளவு நேரம் பேசுகின்றான் என்று மணியைப் பார்த்துக்கொண்டிருக்காதீர்கள். எதை, எப்படிப் பேசுகிறான் என்று ஆராயுங்கள்.

- ஸ்ரெட்போ.

## நாளை

புரட்டாதி 5
புதன்கிழமை
21 .09.2005
திதி: சதுர்த்தி
பின்இரவு: 02.49 வரை
நட்சத்திரம் : அச்சுவினி
முற்பகல் : 10.09வரை
சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம்: 12.02 - 06.02
(யாவும் பழைய நேரப்படி)

# சுகாதாரத் திணைக்கள பயிலுநர்களில் பதினாறு பேருக்கு நிரந்தர நியமனம்

குருநகர்,செப்.20

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் வைத்தியசாலைகளில் பட்டதாரிப் பயிலுநர்களாகச் சேவைபுரிந்து வரும் பட்டதாரிப் பயிலுநர்களில் 16 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.


வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு இந்த நியமனக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி நிரந்தர நியமனம் பெற்றவர்களில் 12 பேர் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் வைத்தியசாலைகளில் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாகத் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

பி.சுஜாதா, வி.தர்மசீலன், வி.எழினி, பி.மகாதேவி, பி.கஜலவன், எஸ்.நடேசன், எம்.அனுஸ்யா, எம்.றஜிதா, பி.கேசினி, பி.மோகனதாஸ், வி.மதிஆனந்தன், கே.லக்ஸ்மன் ஆகியோரே இவ்வாறு நிரந்தர நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகளாவர்.

(எ-51)

## மனிதக் குருதிக்கு மாற்றீடு மனித குருதியே



# கரையோர சமுதாய அபிவிருத்தி திட்ட மாவட்ட அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் க.கணேஸ் நாடாவினை வெட்டி அலுவலகத்தினைத் திறந்துவைத்தார்.

மங்கள விளக்கினை வடமாகாண பிரதிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் உட்படப் பலர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் கே.கணேஸ் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

இத்திட்டத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளராக பா.செந்தில்நந்தனனும் கணக்காளராக சி.குகதாசனும் திட்டமிடல் அலுவலகராக ரி.தர்மராஜாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர், வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை இந்த அலுவலகம் மேற்கொள்ளவுள்ளது என்று கூறப்பட்டது.

முதற்கட்டமாக ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கில் 5 கிராமும் வடமராட்சி வடக்கில் 5 கிராமமும் அபிவிருத்தித் திட்டங்களுக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கல்வி, சுகாதாரம், வீதி புனரமைப்பு போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பணிகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படும் என்று கூறப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், கியூமெடிக்கா, வெண்புறா, லீட்ஸ், சேவாலங்கா, எஸ்.எஸ்.ஆர்.சி. ஆகிய நிறுவனங்கள் இந்தஅபிவிருத்தித் திட்டங்களுக்காக யாழ். அரச அதிபரினால் இனங்காணப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களுடன் இணைந்து வடக்கு - கிழக்குக் கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்ட அலுவலகம் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

யாழ். அரச செயலகத்தில் திறுந்து வைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகம் காணிப்பதிவு அலுவலகத்தின் மேல் கட்டடப் பகுதியில் இயங்குகின்றது. (எ-7)




நேற்றுக்காலை யாழ். மாவட்ட செயலகத்தில் வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படம் இது. இந்த அலுவலகத்தின் பிரதித் திட்டமிடற் பணிப்பாளர் பா.செந்தில் நந்தனனுடன் அலுவலக உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். (படம்: பிரபா)

## காணி நன்கொடை

குடத்தனை,செப்20

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு ஆறரைப் பரப்புக் காணி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியைத் தும்பளையைச் சேர்ந்த அமரர் டாக்டர் சீ.ரத்தினம் வடிவேலுவின் குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனர். (எ-78)

## சிறுவிளான் இந்து மயானத்தை துப்புரவு செய்ய ஏற்பாடு

வலி.தென்மேற்கு,செப்.20

சிறுவிளான், கிராயிட்டி இந்து மயானம் உலக உணவு திட்டத்தின் கீழ் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது. இந்த மயானத்தில் பற்றைகள், செடிகள் பெருமளவு வளர்ந்திருப்பதனால் இங்கு சடலங்களைத் தகனஞ்செய்யவரும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக வலி. தென்மேற்கு பிர தச சபையின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டிருந்தது.

இதனையடுத்து உலக உணவு திட்டத்தின் கீழ் இம் மயானத்தை விரைவில் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

42 மனித நாள்கள் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் வலி.தென்மேற்கு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## பொதுமண்டபத்துக்கு காணி அன்பளிப்பு செய்யக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,செப்.20

சில்லாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நியாப் II திட்டத்தின்கீழ் பொது மண்டபம் ஒன்றை நிறுவுவதற்குப் பொருத்தமான இரண்டு பரப்புக் காணி தேவைப்படுவதாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான காணியை நன்கொடையாக வழங்கவிரும்புவோர் சில்லாலை தெற்கு கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

நியாப் II திட்டத்தின் கீழ்இவ்வருடம் சில்லாலை தெற்கு கிராம அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக மேற்படி பொதுமண்டபம் நிறுவப்படவுள்ளது என்று கூறப்பட்டது. (எ-135)

## பாணாவெட்டி அம்மனுக்கு புதிய இராஜகோபுரம்

வலி.தென்மேற்கு,செப்.20

மாதகல், பாணாவெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கிழக்கு வாசல் இராஜகோபுரம் ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஐந்து தளங்களைக் கொண்டதாக இந்த இராஜகோபுரம் நிறுவப்படவுள்ளதாகவும் -

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது என்றும் - ஆலய இந்து தர்ம பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (எ-135)

## தும்பளை பாடசாலைக்கு றோணியோ இயந்திரம்

குடத்தனை,செப்.20

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு றோணியோ இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அல்வாயைச் சேர்ந்தவரும் தற்போது கொலண்டில் வசித்துவருபவருமான தங்கத்துரை ரவி என்பவர் இந்த றோணியோ இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மேற்படி றோணியோ இயந்திரத்தை வித்தியாலய அதிபர் ம.கணபதிப்பிள்ளை பெற்றுக்கொண்டார். (எ-78)

## வெளிமாவட்ட வாக்காளருக்கு வசதி

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தமது வாக்காளர் பதிவை உறுதிப்படுத்துவதற்காகப் பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகங்கள், பிரதேச சபைகள் என்பவற்றில் வாக்காளர் இடாப்புகள் கடந்த வாரம் முதல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அனைத்துத் தேர்தல் மாவட்டங்களுக்கான வாக்காளர் இடாப்புகள் யாழ்.செயலகப் பதிவாளர் திணைக்களத்தின் கீழ்த் தளத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பொலீஸார், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் பயனடைகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-204-202)

# பேராதனைப் பல்கலைக்கு அடுத்துபடியாக அதிக மாணவர் யாழ்ப்பாணத்துக்கு அனுமதி

## துணைவேந்தர் மோகனதாஸ் தகவல்

யாழ்ப்பாணம், செப்.20

அடுத்த ஆண்டில் பாடகற்கை நெறிகளை மேற்கொள்வதற்கென பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அடுத்தபடியாக அதிக மாணவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்வாங்கவுள்ளது என்று யாழ்.பல்கலைக்கழகத்துணைவேந்தர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கென இம்முறை ஆயிரத்து 905 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டுகளை விட கணிசமான அளவில் உயர்வாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை- யாழ்.பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு முதல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மூன்று கற்கை நெறிகளுக்கு 170 மாணவர் உள்வாங்கப்படவுள்ள னர்.

பௌதிக விஞ்ஞான மாணவர்களில் 30 பேர் கணனி விஞ்ஞான கற்கை நெறிக்கு அனுமதிக்கப்படவுள்ளனர். சகல பாடப் பிரிவுகளிலிருந்தும் 70 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பக் கற்கைக்கு உள்வாங்கப்படவுள்ளனர். துணை மருத்துவுக் கற்கை நெறிகளான தாதியக் கற்கைக்கு 30 பேரும்,மருந்தியல் கற்கைக்கு 25 பேரும் வைத்திய ஆய்வு கூட பரிசோதனைக் கற்கைக்கு 10 பேரும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

தேசிய ரீதியில் ஆகக் கூடுதலாக இரண்டாயிரத்து 107 மாணவர்களை பேராதனைப் பல்கலைக் கழகம் உள்வாங்குகின்றது. கொழும்புப் பல்கலைக் கழகத்திற்கு இம்முறை ஆயிரத்து 860 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். (எ-9)


## மரண அறிவித்தல்

### Dr.செல்லத்துரை கணேசன் (Retired M.O.H)



61'சந்திரோதயா', கனகரட்ணம் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த Dr.செல்லத்துரை கணேசன் (19.09.2005) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கண்டாக்கர் விலா வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை-தில்லைவனம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற Dr.சுந்தரம்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் மூத்தமருமகனும் காலஞ்சென்ற அருள்நாயகி அம்மாவின் அன்புக் கணவரும் மோகனராஜ் (பொறியியலாளர் - லண்டன்), அனுருத்திரன் (பொறியியலாளர் -மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பற்றீசியா, நிருபா ஆகியோரின் அன்பு மாமனாரும் wayne சடாச்சரன், shawn லக்ஷ்மிகாந்தன் அம்ரிதா, அஸ்ரிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஞானாம்பிகை, Dr.மாணிக்கவடிவேல் (இந்தியா), காலஞ்சென்ற Dr.குமாரசுவாமி, சோமசுந்தரம் வள்ளிநாயகி, கனகராயர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவநாயகி, சுவாமிநாதன், சிவகலை, சரஸ்வதி, இன்பமலர், காலஞ்சென்ற வரதராஜா, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் குலசிங்கம் அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (21.09.2005) புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

*61 'சந்திரோதயா',*
*கனகரட்ணம் வீதி,*
*வட்டுக்கோட்டை.*

(40219)(11-15-38)

**தகவல்:**
**மோகனராஜா,**
**அனுருத்திரன்,**
**பிள்ளைகள்.**


## பொதுசன மாதாந்த உதவிப்பணம்

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு அந்தந்த தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெற்று வரும் புற்றுநோயாளர், தொழுநோயாளர், காசநோயாளர் ஆகியோரும் தத்தமது பிரிவு தபால் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலகவட்டாரங்கள்தெரிவித்தன. (எ-135)




வடமராட்சி லயன்ஸ் கழகப் புதிய செயற்குழுவினின் பதவி ஏற்பு வைபவத்தில் கௌரவ விருந்தினராக லயன்ஸ்கழக மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.தணிகாசலம் உரையாற்றுவதையும், லயன்ஸ்கழகப் பிராந்தியத் தலைவர்கள் ஏ.சொக்கலிங்கம், பிரதம விருந்தினரான லயன்ஸ் கழக மாவட்டப் பிரதி ஆளுநர்சபைச் செயலாளர் லயன் எஸ்.ஞானராஜா புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள லயன் வி.சிவகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம் : வடமராட்சிச் செய்தியாளர்)*

## கிளிநொச்சி விவசாயிகளின் அவலம் தொடர்கிறது

# சிறுபோக நெல்லை விற்கமுடியவில்லை; பெரும் போகத்தைக் கைவிட உத்தேசம்!

பரந்தன்,செப்.20

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு நெல்லைச் சந்தைப்படுத்துவதில் ஏற்பட்ட நெருக்கடிகள், பிரச்சினைகள் இன்னமும் தீர்ந்தபாடாக இல்லை. சிறுபோகத்தில் செய்கை பண்ணப்பட்ட நெல்லை விற்கமுடியாமல் அவர்கள் திண்டாடுகின்றார்கள். இந்த நிலையில் இப்போது பெரும் போகம் அண்மித்து விட்டது. சிறுபோக நெல் விற்கப்படாததால் பெரும்போகச் செய்கையை இம்முறை கைவிடுவதென்று விவசாயிகள் தீர்மானித்திருக்கின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை கமக்கார அமைப்புகளின் சம்மேளன மண்டபத்தில் இடம் பெற்ற திட்ட உபகுழுப் பிரதிநிதிகளுக்கான விசேட கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இரணைமடுக் குளத்தின் கீழ் நீர்ப்பாசனம் பெற்று விவசாயம் செய்யும் திட்ட உபகுழுப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கடந்த சிறுபோகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெறப்பட்ட நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத காரணத்தால் எதிர்வரும் பெரும்போகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகளிடம் பணத்தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனாலேயே பெரும்போக உற்பத்தியில் ஈடுபடுவதில்லை என விவசாயிகள்-திட்ட உபகுழுப் பிரதிநிதிகள் - ஏகமனதாகத் தீர்மானித்தனர் என்று அறிய வருகிறது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சிறுபோகத்தில் உற்பத்திசெய்த நெல்லைச் சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்கிய சிரமங்களை அரச அதிபர் தி.இராசநாயகம் திறைசேரியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து, நெல் கொள்வனவுக்கென மாவட்டச் செயலகத்துக்கு ஒரு தொகை நிதியை ஒதுக்கியது திறைசேரி.

விவசாயிகளிடமிருந்து ஒருகிலோ நெல்லை 15 ரூபா வீதம் கொள்வனவு செய்யுமாறு கூறி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் அந்த நிதியைப் பகிர்ந்தளித்தார் அரச அதிபர் தி.இராசநாயகம்.

ஆனாலும், பெரும்பாலான சங்கங்கள் தமது லாபம் கருதி 11 ரூபா 40 சதம் வீதமே நெல்லைக் கொள்வனவு செய்கின்றன; அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச அதிபரின் கணக்குப்படி ஒரு மூடை நெல் (70 கிலோ) ஆயிரத்து 50 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சில சங்கங்கள் 800 ரூபா வீதமே நெல்லைக் கொள்வனவு செய்கின்றன. இதனால், விவசாயிகளுக்கு நட்டமே மிஞ்சுகின்றது. சிறுபோகச் செய்கைக்காகப் பெற்ற கடனைக் கூடத் திருப்பிச் செலுத்த முடியாமல் அவர்கள் தவிக்கின்றார்கள்.

இதனாலேயே பெரும்போக நெற்செய்கையில் இம்முறை ஈடுபடுவதில்லை என்று அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

எனினும், கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் விவசாயிகள் சிலர் குறைந்தளவிலான பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (த-352-202)

## பட்டதாரிகளைச் சமூகமளிக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி,செப்.20

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பிரதேசங்களில் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் நிரந்தர நியமனத்தில் தவறவிடப்பட்ட சகல மாவட்டங்களையும் சேர்ந்த பட்டதாரிப் பயிலுநர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தவறாது சமுகம் தருமாறு கிளிநொச்சி பட்டதாரி பயிலுநர்கள் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (த-12)

## பூவரசங்குளம் வீதி புனரமைக்கப்படுகிறது

ஒட்டுசுட்டான்,செப்.20

துணுக்காய் பூவரசங்குளம் வீதி 36 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு வன்னி புனர்வாழ்வு அமைச்சு 21லட்சம் ரூபாவையும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் 10 லட்சம் ரூபாவையும் முன்னேற்பாட்டு நிதியம் 5 லட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளன. (த-341-203)

## கண்டாவளைக்கு மின் வழங்குவதில் தாமதம்

கண்டாவளை கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் கிராம மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

கண்டாவளைக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கென பரந்தன் சந்தியிலிருந்து மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. வெகுவிரைவில் மின்சார வசதியைப் பெற்றுத்தருவதாகச் சம்பந்தப்பட்டோர் உறுதியளித்தனர். எனினும், இற்றைவரை எந்தவித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என்று கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-352-202)

## மல்லாவி மத்திய கல்லூரியின் வரலாற்று நூல்

மல்லாவி மத்திய கல்லூரியின் வரலாற்றினை விவரிக்கும் 'வரலாற்றுப் பாதையில்' என்னும் நூல் எதிர்வரும் 29ஆம் திகதி மல்லாவி மத்திய கல்லூரியில் வெளியிடப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி புஷ்பவதி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் கலந்துகொள்வார். மேற்படி நூல் கல்லூரியின் நூலகர் றுயினா பாக்கியநாதனால் ஆக்கப்பட்டுள்ளது. (த-322)




## முல்லை நகரப் பகுதியில் திலீபன் நினைவு நிகழ்வு

ஒட்டுசுட்டான்,செப்.20

முல்லைத்தீவு நகரத்தில் தியாக தீபம் திலீபனின் 18 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலரின் தலைமையில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. தமிழீழ சுகாதார சேவையினரும் முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

உணவகங்கள் உட்பட சகல வர்த்தக நிலையங்களும் அதன் சுற்றுப் புறமும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. (எ-341-202)

## இலுப்பைக்கடவையில் சிறப்புறநடந்த அனுபவமும் அறிமுகமும், வெளியீடு

வெள்ளாங்குளம், செப்.20

வி.எஸ்.சிவகரன் எழுதிய 'அனுபவமும் அறிமுகமும்' என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் இலுப்பைக்கடவை வித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்றது.

ஆ.மா. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நூலின் மதிப்பீட்டுரையை அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளாரும் விமர்சன உரையை மாந்தைமேற்கு விசேட ஆணையாளர் எம்.மரியதாஸூம் வெளியீட்டுரையை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர், மன்னார் உதவி அரச அதிபர், நிர்வாக சேவைப் பொறுப்பாளர், கல்விக் கழகப் பொறுப்பாளர், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர், கப்டன் வானதி வெளியீட்டகப் பொறுப்பாளர், மகளிர் அரசியல் துறை மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-415-202)



நூலின் வெளியீட்டுவிழாவில் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி நூலை வெளியிட்டு வைக்க குருமுதல்வர் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.
(படம்:- வெள்ளாங்குளம் செய்தி யாளர்)

## பாதுகாப்பு வலயத்தால் வவுனியாவில் 26 பாடசாலைகள் வேறு இடங்களில்!

ஒட்டுசுட்டான்,செப்.20

வவுனியாவில் வடக்கு-கிழக்கு வலயங்களில் உள்ள 89 பாடசாலைகளில் 26 பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகத் தமது சொந்த இடத்தில் இயங்க முடியாத நிலையில் உள்ளன என்று வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் 56 வீதமான நிலப்பரப்பைக் கொண்டுள்ள வவுனியா வடக்கு கல்வி வலயமானது மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளை உள்ளடக்கியதாகவுள்ளது.

இந்த வலயத்தில் ஓமந்தைக் கோட்டத்து 47பாடசாலைகளும் நெடுங்கேணிக் கோட்டத்து 42பாடசாலைகளும் இருக்கின்றன. இவற்றில் 22 பாடசாலைகள் இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகள் பற்றாக்குறையுடன் பெரும்சிரமங்களுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றன.

இதனால், ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்- என்றார். (த-341-203)

## விவசாயக் குழுக் கூட்டம்

ஒட்டுசுட்டான்,செப்.20

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ள 5 கூட்டங்களில் பங்கேற்கிறார்.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு மாவட்ட விசாயக் குழுக்கூட்டமும் முற்பகல் 11.30 மணிக்கு கோட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் பிற்பகல் 1.30 மணிக்கு அத்தியாவசியக் குழுக்கூட்டமும் -

பிற்பகல் 2.30 மணிக்கு சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கூட்டமும் பிற்பகல் 3மணிக்கு தேசிய ஒழுங்கமைப்பு அதிகார சபைக் கூட்டமும் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா குமார் தெரிவித்துள்ளார். (த-341-202)

## முன்பள்ளிகளின் ஆக்கப்பொருள் காட்சி

பரந்தன்,செப்.20

கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள 32 முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி அண்மையில் புளியம்பொக்கணை நவஜீவனம் பகல் பராாிமரிப்பு நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர் மு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 3-5 வயதிற்கு உட்பட்ட சிறார்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் செய்த பொருள்கள் வெவ்வேறாகக் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

32 முன்பள்ளிகள் பங்குபற்றிய இக்கண்காட்சியில் 8 முன்பள்ளிகள் மாவட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டன.

நவஜீவனம் முன்பள்ளி, விசுவமடு சீ.எஸ்.ஐ. முன்பள்ளி, முரசுமோட்டை சீ.எஸ்.ஐ. முன்பள்ளி, முரசுமோட்டை உழவனூர் தம்பிராசா முன்பள்ளி, ஊரியான் முன்பள்ளி, கோரக்கன்கட்டு புலேந்திரன் முன்பள்ளி, கண்டாவளை றஞ்சன் வேதா முன்பள்ளி, கலவெட்டித்திடல் கனோஜி முன்பள்ளி ஆகியனவே தெரிவுசெய்யப்பட்டன.

விரைவில் நடைபெறவுள்ள மாகாண மட்ட ஆக்கப்பொருள் கண்காட்சியில் மேற்படி முன்பள்ளிகள் பங்குபற்ற உள்ளன என கண்டாவளைப் பிரதேச முன்பள்ளி மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இக்கண்காட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-352-204)

## மருத்துவசேவை நடுவப் பணியகத்தில் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள்

கிளிநொச்சி,செப்.20

தியாகி லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 18 ஆவது ஆண்டு நினைவுநாள் நிழ்வுகள் கடந்த 15ம் திகதி கிளிநொச்சியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நடுவப்பணியகத்தில் ஆரம்பமாகின.

தமிழீழ சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த தமிழ்வாணனின் தலைமையில் முற்பகல் 9.55 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை நலவாழ்வு நிறுவனத்தின் பணிப்பாளரும் தமிழீழத் தேசியக் கொடியை திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் செ.நாயகனும் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை நலவாழ்வு நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர்களும் ஏற்றிவைத்தனர்.

தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை மருத்துவப் போராளி அன்பழகன் அணிவித்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (த-12)

# முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவோர் முதலில் தங்கள் சமூக ஒற்றுமையைப் பார்க்கட்டும்!

## திருகோணமலைக் கூட்டத்தில் ஹக்கீம் சாட்டை



கொழும்பு, செப்.20

''முஸ்லிம்களும், முஸ்லிம் தலைமைகளும் ஒன்றுபட - ஒற்றுமைப்பட - வேண்டும் என முஸ்லிம் அல்லாத தலைவர்கள் பேச வந்துவிட்டார்கள். ஏதோ அவர்கள் சமூகத்தில் பூரண ஒற்றுமை உள்ளது போலவும் முஸ்லிம்களிடம் மட்டும் தான் ஒற்றுமை இல்லை என்பது போலவும் அவர்கள் பேசுகின்றார்கள். முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாததனால்தான் தனித்தரப்பு விவகாரத்திலும், பொதுக் கட்டமைப்பு விடயத்திலும் முஸ்லிம்களுக்கு எதனையும் செய்ய முடியவில்லை என்றும், முஸ்லிம்களை அவற்றில் சேர்த்துக் கொள்ள முடியவில்லை என்றும் இவர்கள் கூறி வருகின்றார்கள். இத்தகைய பசப்பு வார்த்தைகளைக் கூறி இனி மேலும் முஸ்லிம்களை இவர்கள் ஏமாற்றி விடமுடியாது.

-இவ்வாறு முஸ்லிம்கள் ஒற்றுமை குறித்து வலியுறுத்துவோருக்கு சூடு கொடுக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி.

கடந்த சனியன்று திருகோணமலையில் கட்சியின் திருகோணமலை மாவட்ட மத்திய குழுவின் வழிகாட்டலில் பிரதேச முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ் அமைப்பும், முஹம்மதியா இளைஞர் காங்கிரஸ் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றும்போதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது:-

தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமை இருக்கிறது. அதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறுக்கவில்லை. அதே போல முஸ்லிம்களுக்கும் சுயநிர்ணய உரிமை இருக்கிறது. அதனை முஸ்லிம்களும் அடையவேண்டும்.

சமாதானப் பேச்சிலும், பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் முஸ்லிம்கள் தரப்பில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இருந்தும் அரசாங்கமும், புலிகளும், சர்வதேச சமூகமும் முஸ்லிம்களை சட்டை செய்யவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் இன்று முஸ்லிம்களுக்கு முக்கியமானதாகும். முஸ்லிம்களிடம் ஒற்றுமையில்லை என்ற உணர்வை அதிகரிக்கச் செய்துவிட்டு, இதனால்தான் நாம் முஸ்லிம்களுக்கு உதவி செய்யத் தயாராகிறோம் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷ கூறிவிட்டால் அதனை மட்டும் கொண்டு அவர்தான் சிறந்தவர் என்று கூறிவிடமுடியாது.

ஜனாதிபதி வேட்பாளர்களில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி ஆழமாக நோக்கவேண்டும். முஸ்லிம் காங்கிரஸை கூறுபோடாத வகையில் இருவரில் எவர் நடந்து கொள்கிறார் என்று பார்க்கவேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதைக்கொடுக்க வேண்டும்; அவர்களது பிரச்சினைகளுக்கு என்ன தீர்வை வழங்கவேண்டும் என்பன குறித்து இந்த ஜனாதிபதி வேட்பாளர்களில் எவரும் திட்டவட்டமாக எதையும் கூறவில்லை. ஆனால், முஸ்லிம்களுக்கு எதைக் கொடுக்கக் கூடாது என்பதில் இருவேட்பாளர்களுக்கும் தெளிவான பார்வை இருப்பதாகவே தெரிகிறது.

இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் பலமும் பலவீனமும் அமைந்திருக்கின்றன. மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினருடனும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டார் என்பது அவரது பலமாகவும், பலவீனமாகவும் இருக்கிறது. அதேபோல சமாதானத்தை வலியுறுத்தி யுத்த நிறுத்தம் செய்து தைரியமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்தமை ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பலமாகவும், பலவீனமாகவும் நோக்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்த இருவரும் 'கௌரவமான சமாதானம்' குறித்து அடிக்கடி பேசுகிறார்கள். இந்த இருவரும் 'கௌரவமான சமாதானம்' பற்றி பேசுவதை முதலில் நிறுத்த வேண்டும். அவர்கள் இவ்வாறுபேசுவதில் அர்த்தமில்லை. ரணில் ஒஸ்லோ பேச்சைப் பற்றி பேசுவதிலும் அர்த்தமில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவர்களது பேச்சுகளையும் செயற்பாடுகளையும் மிக அவதானமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த இரு வேட்பாளர்களும், ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பொதுத் தேர்தல் ஒன்றில் முஸ்லிம் காங்கிரஸின் பங்கு என்ன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதுவும் திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் எப்படி அமைய வேண்டும் என்பதையும் ஆழமாக நோக்குகிறோம்.

ஜனாதிபதித் தேர்தல் முதலில் வருமா அல்லது பொதுத் தேர்தல் முதலில் வருமா என்றும் பேசப்படுகின்ற நிலையில் எந்தத் தேர்தல் முதலில் வருகிறதோ அதற்கு ஏற்றவாறு முஸ்லிம் காங்கிரஸின் அணுகுமுறையில் மாற்றங்கள் அமையும் - என்றார் ஹக்கீம். (எ-க)

## பரிசளிப்பும் நூல்வெளியீடும்

யாழ்ப்பாணம், செப்.20

யாழ். இந்துக் கல்லூரி ஒன்றியத்தின் ஐக்கியராச்சிய ஆதரவுடன் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய சதுரங்க சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வும் 'இந்துவின் சதுரங்கன்' தசாப்த மலர் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கு.குருபரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் சு.இராசதுரை, திருமதி நேசதேவி இராசதுரை ஆகியோரும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலை புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந.ஜெயகுமாரனும் கலந்துகொள்வர். (எ-202)




ஜெய்குருதேவ்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின்

**வாழும் கலைப் பயிற்சி**

**(சிறுவர்களுக்கானது)**

8 வயது தொடக்கம் 15 வயதுவரை

குறிப்பு: ஞாபக சக்தி அதிகரிக்கும், மனம் ஒரு நிலைப்படும். பிள்ளைகள் தன் சக்தி அறிந்து உள் உணர்ந்து ஆன்மீக வழியில் வளர்ந்து ஊக்கமும் உற்சாகமும் கொண்டு தம் எதிர்காலச் சவால்களை துணிகரமாகவும் வெற்றிகரமாகவும் எதிர்கொள்ளும் மனவலிமை ஏற்படும். அஸ்மா குணப்படும்.

நாள் : 2005.09.22 முதல் 2005.09.25 வரை

நேரம் : காலை 9 முதல் மாலை 5 வரை

இடம் : கம்பன் கோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544

பதிவுகளை 2005.09.21 அன்று மேற்படி மண்டபத்தில் மேற்கொள்ளலாம்.

அன்பில் மலருங்கள்! அனைவரும் வருக! உங்களை உணருங்கள்!

(40186) (51-11-34)

www.artofliving.org www.srisriravishankar.org



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

20.09.2005




வல்வெட்டித்துறையைச்சேர்ந்த ஜெகநாதன் - மஞ்சு தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரிலக்ஷன் தனது முதலாவது பிறந்த நாளைத் தனது இல்லத் தில் இன்று (20.09.2005) செவ்வாய்க்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடு கின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பாமார், அம்மப்பாமார், அப்பாச்சிமார், அம்மம்மாமார், அத்தை, மாமிமார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், தங்கை, திருமலையில் வசிக்கும் பூட்டி, பெரியம்மாவும் குடும்பத்தினரும் மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் வல்வை வைத்தீஸ்வரன் முத்துமாரி அம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

லக்சுமி பவனம்
கே.கே.எஸ். வீதி,
வல்வெட்டித்துறை.

(40103)(51-)

தகவல்:
அப்பப்பா பே. சத்தியமூர்த்தி.



கலை, வர்த்தகத்திற்கு தன்னிகரில்லா தனித்துவமான ஒரே நிறுவனம்

பிரிவு 1

**விஞ்னா கல்வி நிறுவனம்**

**A/L DAY CLASS (Mon. to Fri.)**

Acc. திரு.பாலவாசன் (8.30), Eco. திரு.உதயன் (10.30)
B.St. திரு.முரளி (7.30)

Tam. திரு. குழந்தை (8.30) H/C. திரு.ஜெயக்குமார் (9.30)
Log. திரு.ஜெயந்தன் (11.30) Geo. திரு. பாபு (11.30)
Hin. திரு. N.T. தரன் (12.30) Chri. திரு. வசந்தன் (9.30)
P/Sci. திரு.றொபின்சன் (7.30) Hist. திரு.பத்மன்
Drama. திரு.மதி

(சி-45149)(11-46-32)

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பிரிவு 2 மிகவிரைவில்


# கண்ணீர் அஞ்சலி




**திருமதி சரஸ்வதி கனகரத்தினம்**

அவர்கள் 18-09-2005 இல் சிவபதம் அடைந்து விட்டார் என்பதை கேள்வியுற்று அதிர்ச்சியும், ஆழ்ந்த துயரமும் அடைவதுடன் அன்னாரின் மறைவில் துயருற்று இருக்கும் மேன்மை தங்கிய கனகரத்தினம், சட்டத்தரணி கேசவன், Dr.சிவனேசன் ஆகியோரின் குடும்பங்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தர்மகர்த்தா சபை,
655, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (40183)(32-11)

வி.எஸ்.இராமநாதன்
தலைவர்
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வேலுப்பிள்ளை ஐயாத்துரை (பத்தர்)**

மண்ணில் 02-03-1927 விண்ணில் 01-10-2004

தட்டான்குளம் வீதிதனில் பத்தர்குல
நாயகனாய்ப் பெற்றெடுத்த பிள்ளைகளை
அன்புடன் வளர்த்து ஆளாக்கிய எம்
அன்புத் தெய்வம் விண்ணுலகம் சென்று
ஓராண்டாகியும் எம்துயரம் மாறவில்லை.
அவரின் ஆத்மா சாந்தியடையட்டும்.

(40184)(32-11)

தட்டான்குளம் றோட்,
புத்தூர் சந்தி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

- குடும்பத்தினர்.


# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவத் தற்காலிகக் கடை ஏலம்

அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவத் தற்காலிகக் கடைகள் 01.10.2005 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன.

1. ஐஸ்கிறீம் கடை
2. இனிப்புக் கடை
3. வறுவல் கச்சான் கடை

தெரிவு செய்யப்படுபவர்கள் முழுப்பணத்தையும் செலுத்திக் கடைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**தலைவர்,**
**அறங்காவலர் சபை.**

(சி-45201) (39-32-11)

# மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தடை ஏற்படுத்தும் குடும்ப வன்முறைகள்

**கலாசாரம்**

இங்கு 65 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். இதன் கலாசாரத்தின் மிகக் குறிப்பிடத்தக்க அம்சம் இலக்கியத் துறையில் உள்ளது. இக் கலாசாரம் பெரும்பாலும் கிரேக்க, அராபிய மற்றும் ஏனைய மொழிகளிலிருந்து புராதன ஜீஸ் (Geez) மற்றும் நவீன அம்காரிக மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டவையாகும். அநேகமான படைப்புகள் சமய ஆராய்ச்சி அல்லது புராணக்கதைகள் போன்ற தன்மையுடையவையாக உள்ளன. உலக விவகாரங்கள் குறித்த இலக்கியங்கள் பெரும்பாலும் வரலாற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன.

**மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) நினைவாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட நினைவுப் பேருரையின் ஒரு பகுதி கடந்த 23-08-2005ஆம் திகதி உதயனின் கல்விக்களம் பகுதியில் பிரசுரமாகியிருந்தது. "இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை- ஒப்பீட்டு ஆய்வு நோர்வே- எதியோப்பியா - இலங்கை" என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட இந்த நினைவுப்பேருரையின் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.**

**எதியோப்பியாவின் கல்வி முறை**

எதியோப்பியாவில் மக்களின் கல்வியின் நிலை மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. உதாரணமாக, 1994 இன் குடிசன மதிப்பீட்டின்படி 5 வயதும் அதற்கும் கூடுதலான வயதுடையவர்களின் மொத்த சனத்தொகையில் 11 சதவீதத்தினர் ஆண்களாகவும், 8 சதவீதத்தினர் பெண்களாகவும் இருந்ததுடன் இவ்விருபாலாரில் 10 சத வீதத்தினர் பல்வேறு மட்டங்களில் பாடசாலைக்குச் சமுகமளித்தனர். நகர்ப்புறங்களில் கல்வி கற்போர் 34 சதவீதமாகவும் கிராமப்புறங்களில் கல்வி கற்போரின் வீதம் 6 சதவீதமாகவும் மட்டுமிருந்தது. எதியோப்பியாவின் மொத்தச் சனத்தொகையில் 10 வயதும் அதற்குக் கூடுதலான வய துடையோரில் 30 சதவீதத்தினர் ஆண்களாகவும், பெண்கள் 17 சதவீதத்தினராகவும் இவ்விருபாலாரில் 23 சதவீதத்தினர் கல்வியறிவு உடையவர்களாகவும் இருந்தனர். நகர மற்றும் கிராமியப் பகுதிகளில் கல்வியறிவு வீதம் முறையே 69 சதவீதமாகவும் 15 சதவீதமாகவும் காணப்பட்டது. (CSA 1998).

**எதியோப்பியாவில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்**

எதியோப்பியாவில் பாரம்பரியமாக இளைஞர்கள் தமது கல்வி அல்லது சமூகப்பிரச்சினைகள் பற்றிய வழிகாட்டலையும் ஏனைய ஆலாசனைகளையும் மூத்தோர்களிடமிருந்து பெறுகின்றனர். சம்பிரதாயமற்றதாக இருந்தபோதும் ஒரு நபரின் பிரச்சினையைப் பொறுத்து ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதில் நண்பர்கள், சகோதரர்கள், மற்றும் சகோதரிகள் மற்றும் ஒரு குடும்பத்தின் ஏனைய மூத்த அங்கத்தவர்கள் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றனர். பிரச்சினையானது அதிகளவு தனிப்பட்டதாக இருக்குமாயின் குடும்ப அங்கத்தவர்களை விட நண்பர்களிடம் தமது பிரச்சினையை அனேகமானோர் கொண்டு செல்வது வழக்கமாகும்.

எதியோப்பியாவின் கல்வியின் நீண்டகால வரலாற்றுடன் ஒப்பிடுகையில் எதியோப்பியப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் சேவையானது அதனது ஆரம்பக் கட்டத்தில் இருந்தது போன்றுள்ளது. இச்சேவை பிரதானமாக இடைநிலைக்கல்விப் பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்படுகின்றன. பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் வழிகாட்டல் ஆலோசனை வழங்குவோர் பலர் உளவியலில் ஆகக் குறைந்தது ஒரு முதலாவது வகுப்புப் பட்டத்தைக் கொண்டுள்ளவர்களாக இருக்கின்றனர்.

**இலங்கை அமைவிடம்**

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள அழகான இயற்கை வளம் கொண்ட நாடாக இலங்கை உள்ளது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத்தீவு தென்னாசியாவில் இந்தியாவுக்கு அண்மையில் உள்ளது. இது 65610 சதுர கிலோமீற்றர்பரப்பளவைக்கொண்டது.

**கலாசாரம்**

பாரம்பரிய கலாசாரங்களைத் தன்னகத்தே உடைய இலங்கை சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர்களைக் கொண்ட நாடாகும். பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றும் மக்கள் இங்கு வாழ்கின்றார்கள். எனவே, இங்கு பன்மைக் கலாசார அம்சங்கள் பிரதிபலிக்கின்றன. இக்கலாசார அம்சங்களைப் பின்பற்றும் விழாக்களும் சடங்குகளும், பண்டையநாள் தொடக்கம் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.

1970ஆம் ஆண்டுகளில் இருந்து இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாகப் பல ஆயிரக் கணக்கானோர் இறந்துள்ளதுடன் பொருள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இது நாட்டின் அபிவிருத்தியையே சிதைத்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் கிட்டத்தட்ட 10 சதவீதத் தொடர்ச்சியான பாதீட்டுப் பற்றாக்குறை உள்ளதாக இருக்கிறது. மொத்த வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 20 சதவீதமாக உள்ளதுடன், மொத்த செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதமாக உள்ளது. நாட்டின் அரசியல் இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் வரை இந் நிலையை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது.

## பொருத்தமான வழிகாட்டல் இன்றேல் விளைவு விபரீதம்

**இலங்கையில் கல்வி முறை**

பாரம்பரிய, கலாசாரச் செழுமையைக் கொண்ட இலங்கை 16 ஆம் நூற்றாண்டில் அந்நியரின் காலனித்துவ ஆட்சிக்குட்பட்டு 1948 இல் சுதந்திரமடைந்தது. அதிலிருந்து பல கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் 1972, 1981, 1997 இல் நடைமுறைப் படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளன.

1992 ஆம் ஆண்டு இலங்கை தேசியக் கல்வி ஆணைக்குழு பொதுக் கல்வி சீர்திருத்தத்தை நடைமுறைப் படுத்த ஆலோசனைகளை முன் வைத்தது. இதன் நோக்கங்களாக

1. கல்வி வாய்ப்புகளில் சர்வசன மற்றும் சமத்துவ அடைதற் தன்மையை உறுதிப்படுத்தக் கல்வியை சனநாயகத் தன்மையானதாக்கல்.
2. தேசிய நோக்கங்களையும், கல்வி நோக்கங்களையும், குறிக் கோள்களையும் ஒழுங்கமைத்தல்.
3. ஒவ்வொரு தனியாளுக்கும் கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தலும், அவரின் முழுமையான சமநிலை ஆளுமையை அபிவிருத்தி செய்தலும்.
4. சமூக, பொருளாதார, கலாசார, சமய மற்றும் அரசியல் குறிக்கோள்களைப் பூரணப்படுத்தக்கூடிய கல்வியை வழங்கல்.
5. இயற்கைச் சூழலுடன்இணைந்த குடிமக்கள் வாழ்வுக்கு வழியமைத்தல்.

என்ற வகையில் இச்சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**இலங்கையில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்**

இலங்கையில் 1950 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாணவர்களதும் விவரங்கள் அடங்கிய திரள் பதிவுகள் பேணப்பட்டன. இதற்கென வடிவமைக்கப்பட்ட படிவங்களை ஆசிரியர்கள் பூரணப்படுத்தினர். மேலதிகமாக இது தொடர்பான ஏனைய விடயங்கள் எதுவும் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. தொடர்ந்து 1960 தொழிலுக்கு வழிகாட்டல் சேவை ஆரம்பமானது. பின் 1981 கல்வி வெள்ளையறிக்கையில் 34 தொடக்கம் 50 வரையான பகுதியில் வழிகாட்டலின் முக்கியத்துவம் எடுத்தியம்பப்பட்டது. 1981 இல் இளைஞர் சேவை மன்றமும் கல்வியமைச்சும் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியில் வழிகாட்டல் சேவையை இனங்கண்டு கொள்ளலும் அதற்கான வேலைத்திட்டங்களை நிறைவேற்றுதலும் பற்றிய செயலமர்வு நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1982 இல் யொவுன் மித்துரோ ஆலோசனைச் சேவை




அமைப்பு கொழும்பில் தொடக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு இந்நிலையம் 30 இற்கு மேற்பட்ட நாடளாவிய ஆலோசனைச் சேவை நிலையங்களைக் கொண்டு இயங்கியது.

மேலும் களனிப் பல்கலைக்கழகம், தெரிவு செய்யப்பட்ட இளைஞர் சேவை மன்றங்கள், ஜனரத்தின தொழில்நுட்பக் கல்லூரி, தெரிவு செய்யப்பட்ட மாவட்ட வைத்திய சாலைகள், சுயாதீனமாக இயங்கும் தனியார் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் நிறுவனங்களும் தற்போது இயங்கி வருகின்றன.

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்விச் சீர்திருத்தத்தினூடாக எல்லாப் பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், அதற்கான தகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. மேலும் ஆசிரியப் பயில்வில் ஈடுபடும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணிப் பட்டப் பாடநெறிகளில் ஆலோசனை வழிகாட்டல் பாடநெறி இணைக்கப்பட்டுள்ளது. இத்துறை சார்ந்த பயில்வை எல்லா ஆசிரியர்களும் பின்பற்றுதல் மிகப் பொருத்தமானது என்ற வகையில் இன்று இலங்கையில் இத்துறை சார்ந்த அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் மாணவர்கள் எதிர்நோக்கும் தனிப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணவும் தொழில் வழிகாட்டல்களுக்கு உதவவும் இத்துறை அபிவிருத்தி நோக்கி இன்று நகர்த்தப்படுகின்றது.

நோர்வே, எதியோப்பியா, இலங்கை ஆகிய நாடுகளில் இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை தொடர்பான ஒப்பீட்டாய்வை மேற்கொண்டபோது மிக முக்கியமான விடயங்களில் ஒத்த தன்மைகள் (Similarities) காணப்பட்டன. அதாவது மாணவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் ஒரே மாதிரியானவையாகக் காணப்பட்டன. இப்பிரச்சினைகள் பெரும்பாலும் பாடசாலையுடனும், குடும்பத்துடனும் தொடர்புடையவையாக இருந்தன. அவற்றுள் கற்றலில் கவனம் செலுத்தாமை, ஞாபக மறதி, பாடசாலை ஒழுங்கு முறை, முரண்பாடுகள், ஆசிரியர் - மாணவர் உறவில் பொருத்தப்பாடின்மை, வன்முறைகள் அதிகரிப்பு, பாடசாலைக் கலைத்திட்ட விடயங்கள், குடும்பத்தில் தாய் - தந்தை முரண்பாடுகள், பிரச்சினைகள், பிளவுபட்ட குடும்பத் தாக்கங்கள் என்பவை இம் மூன்று நாட்டு இடைநிலை வகுப்பு மாணவர்களையும் பெருமளவு தாக்கத்துக்குள்ளாக்குகின்றன. எனவே, இவற்றிலிருந்து விடுதலை பெற மாணவர்களுக்கு உதவுதல் மிக அவசியம் என்பதே இந்த ஒப்பீட்டு ஆய்வின் முக்கிய அபிவிருத்தி நோக்கிய தீர்வாக முன்வைக்கப்படுகின்றது. இவ்வகையில் கல்வி வழிகாட்டல் தொடர்பான மேலதிக செயற்றிட்டங்கள் தேவையாகவுள்ளன.

(முற்றும்)

**தி.கமலநாதன்**
பீடாதிபதி.
**பா.தனபாலன்**
உப.பீடாதிபதி.
யாழ்.தேசிய
கல்வியற்கல்லூரி.

## கல்விச்சாலைக் காட்சிகள்



கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளில் தீவக வலயத்தில் முதலாவது இடத்தைப் பெற்ற காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினரான தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ்மாவட்ட தலைவர் செல்வி தி.பெரியதம்பி உரையாற்றுவதையும் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் கற்பித்த ஆசிரியர் ஒருவர் கௌரவிக்கப்படுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயு தம்பிள்ளையும் படத்தில் உள்ளார்.

*(படம்: காரைநகர் செய்தியாளர்)*



பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜாவைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன், அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதன் ஆகியோர் வரவேற்று அழைத்து வருதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*




இணுவில் மத்திய கல்லூரியின் பவள விழா அண்மையில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் துரை எங்கரசு தலைமையுரையாற்றுவதைப் படத்தில் காணலாம். விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)*



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பப் பிரிவுக்கான இரு மாடி வகுப்புறைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கட்டடத்திற்கு நிதி வழங்கும் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன பொறியியலாளர்களுடன் கல்லூரி அதிபர் உட்பட ஏனையோரும் காணப்படுகின்றனர்.

*(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*

## இதயம் கலங்கிய ஈராண்டின் நிறைவு

'உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்'



உதிப்பு 22 - 10 - 1928
உதிர்வு 20 - 09 - 2003

**அமரர் P.R.அருள்நாயகம்**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

அன்பு நிறைந்த பொக்கிஷமே!!
எங்கள் நாலிரண்டு கண்களும்
உம்மைக் கண்டு ஆண்டுமோ இரண்டாச்சு
மீண்டும் நீர் வருவீரென்று பூண்டோம் உறுதி
கொண்டோம் பக்தி வேண்டுகிறோம் ஆண்டவனை
வேகும் எம் மனது வேதனையால் உருகி
கண்ணீராய் வடியுதப்பா!
மன்னனே புனிதனே மாண்டவர் வரமாட்டார்
வேண்டுதல் எமக்களிப்பீர் என்பதை நாமறிவோம்
ஆறுதல் நாமடைய ஆண்டவரிடம்
வரம்வேண்டி எமக்களியும்.

இல.55, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (40174)(46-15-19)
உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 1st Year Remembrance



On Earth 12.12.1949 In Heaven 17.09.2004

Late

**Mr.Kanagaradnam Karunanithy**
(Former Purchasing Officer of Lanka Cement Ltd.,Jaffna)

"Year may pass and
Time will fly
But loving memories of
you will never die.

Sadly missed and Fondly remembered
by your Family.

(40154)(46-15-19)

## பொலீஸ் பதிவு குறித்து கொழும்பில் தமிழர்கள் அஞ்சத் தேவையில்லையாம்

"கொழும்பில் பொலீஸ் பதிவுகள் இடம் பெறுவதால் தமிழர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. கள்வர்கள்தான் அச்சப்பட வேண்டும். பொலீஸ் பதிவுக்கான விண்ணப்பப்படிவம் தனிச்சிங்கள மொழியில் இருப்பது நீங்கள் கூறித்தான் எனக்கே தெரிகிறது.அந்தப் படிவத்தை தமிழ்மொழியிலும் வழங்க உடனடி நடவடிக்கை எடுப்பேன்."

-இவ்வாறு உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தார் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ.

கொழும்பில் மீண்டும் ஆரம்பமாகியிருக்கும் பொலீஸ் பதிவுகள் குறித்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார் அவர். இவ்விவகாரம் குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இது கொழும்பில் மட்டும் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையல்ல. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இது மேற்கொள்ளப்படுகிறது.

உண்மையில் தமிழர்கள் இதில் அச்சப்படுவதற்கு எதுவும் இல்லை. கள்வர்கள் தான் இதைக்கண்டு பயப்படவேண்டும்.இதேவேளை, பொலீஸ் பதிவுத் திட்டம் என்ற ஒன்று இருப்பது எனக்குத் தெரியும். அதன் அமுலாக்கம் கீழ்மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதால் உண்மையில் அதைப்பற்றி மேல்விளக்கம் எதுவும் எனக்குத் தெரியாது. இந்தப் படிவங்கள் தனிச் சிங்கள மொழியில் விநியோகிக்கப்படுகின்றன என நீங்கள் கூறித்தான் எனக்குத் தெரியும். தமிழ்மொழி மூலம் படிவங்களை வழங்குவதற்கு நான் உடனடி நடவடிக்கை எடுப்பேன். -இவ்வாறு பொலீஸ் மா அதிபர் மேலும் கூறினார். (க)

## ஜனாதிபதியுடன் பேச இடதுசாரிகள் முடிவு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் முக்கியமான பேச்சுகளை நடத்துவதற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர், தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் முன்னுக்குப் பின் முரணான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதால் இதுவிடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை என்ன என்பதை உறுதிப் படுத்திக் கொள்வதற்காகவே இவ்வாறான பேச்சு நடத்தப்படவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்தராஜபக்ஷ, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தினால் மிகவும் அதிருப்திக்குள்ளாகியிருக்கும் இடதுசாரிக் கட்சிகள் இது தொடர்பில் ஏற்கனவே தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில்
தோற்றி 2A,C பெறுபேற்றினைப் பெற்ற
**நித்தியானந்தம் மீராஜினி**
மென்மேலும் அவர் தம் உயர் கல்வியில்
சிறந்து விளங்க வாழ்த்துகின்றேன்.

'சுதா கிரபிக்ஸ்'
சித்தன்கேணிச் சந்தி,
சித்தன்கேணி. (40165)(46-15-19)
-சகோதரன்.


**யாழ் - கொழும்பு பெரிய பஸ் கட்டணம்**
**குறைக்கப்பட்டுள்ளது Rs.1100/=**
**திரீ ஸ்ரார் ஹோட்டல்**
இல.162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 3817 7125


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 24.03.1962
விண்ணில் 07.08. 2005

**அமரர் குழந்தையன் திருநாவுக்கரசு**

07.08.2005 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.09.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள்அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு.
என்றும் அழியா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
(40090)(46-15-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 - 09 - 1947
மறைவு 01 - 10 - 2004

**அமரர் தாமோதரம்பிள்ளை மகாதேவன்**
(இலங்கை மின்சார சபை - பருத்தித்துறை)

ஆண்டு ஒன்று ஆனாலும்
மறையாத மதிமுகமே
எங்கள் தந்தையே
அன்பு மழை பொழிந்து அரவணைத்த
அன்புத் தெய்வமே
எமைப் பிரிந்து ஓராண்டு மறைந்தாலும்
நீங்காத நினைவுகளுடன்
எம் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்கி
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று(20.09.2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டுத் திதியிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆண்டிச் செட்டியா வளவு,
வல்வெட்டி. (40168)(46-15-19)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 - 01 - 1949
மறைவு 13 - 10 - 2003

**அமரர் சுப்பையா துரைசிங்கம்**
(குட்டி/ராமேஸ்)
(தேவி ஸ்ரோர் உரிமையாளர்)

ஈராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பு ஊற்று என்றும்
எம்மைவிட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பொன்னுச்சாமி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
(40158)(46-15-19)


**UNIVERSITY OF MADRAS**
INSTITUTE OF DISTANCE EDUCATION
**சென்னை பல்கலைக்கழகம்**

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது'

**சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரப் பட்டப்படிப்புகள்**
**2005 - 2006 கல்வி ஆண்டிற்கான அனுமதி சேர்க்கை அறிவிப்பு**

**UNDERGRADUATE**
3 Year Degree Programme

B.Com Bachelor of Commerce
B.B.A. Bachelor of Business Administration
B.C.A. Bachelor of Computer Application
B.Sc. Psychology
B.A. Tamil
B.A. English

**POSTGRADUATE**
2 Year Degree Programme

M.Com Master of Commerce
M.Sc. Psychology
M.A. Tamil
M.A. English
M.A Christian Studies
M.A Economics

**Regular University Stream**
முறைசார் பல்கலைக்கழக அமைப்பு
A/L 3 பாடங்களில் தேர்ச்சி
(Maths,Bio-Science,. Commerce, Arts)

**Open University Stream**
திறந்த நிலை பல்கலைக்கழக அமைப்பு
18 வயது பூர்த்தியடைந்தவர்களும் 3 ஆண்டு பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்
**ASIAN COMPUTER SYSTEMS**
2G, Stanley Road, Jaffna. Tel : 021 222 5677

# பண்டாரநாயக்க பரம்பரையே இப்போதும் நாட்டை ஆள்கிறது!

## பரம்பரைவாதத்தை மெச்சுகிறார் அனுரா பண்டாரநாயக்க

லங்காதீப

கொழும்பு, செப்.20

இப்போதும் இந்த நாட்டை பண்டாரநாயக்க பரம்பரையோ நிர்வகித்து வருகிறது.

- இப்படிக் கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான அனுரா பண்டாநாயக்க.

இன்னமும் 'பண்டாரநாயக்க பரம்பரையே இந்நாட்டை நிர்வகித்து வருகிறது. நாடடின் எதிர்காலத் தீர்மானங்களையும் பண்டாரநாயக்க பரம்பரையே மேற்கொண்டு வருகிறது. உதாரணமாக எமது அண்டை நாடான இந்தியாவின் சனத்தொகையில் 80 வீதமானனோர் இந்துக்களே. ஆயினும், இத்தாலிய நாட்டு கத்தோலிக்கப் பெண்ணொருவர் நாட்டின் பிரதம ராக நியமிக்கப்பட்டதற்கு அவரது திறமை காரணமல்ல அவரது பெயரொடு காந்தியின் பரம்பரைப் பெயர் ஒட்டிக்கொண்டுள்ளது. அவர் இந்திரா காந்தியின் மருமகள் என்பதும் ராஜீவ் காந்தியின் மனைவி என்பதுமே காரணமாகியுள்ளது.

புதிய மார்க்கம் ஒன்றில் கால்பதிக்க முனையும் பரம்பரை வாதத்தைக் கண்டித்து வருவோருக்கு இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பரம்பரை வாதம் எம்மிடம் இல்லை மக்கள் எமக்கு அளித்துள்ள அதிகாரப்பலமே எம்மிடமுள்ளது.

கடந்த காலங்களில் அரசியல் பழி வாங்கல்கலால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடுகளை வழங்குவது தொடர்பாகக் ஹம்பகாவில் இடம்பெற்ற வைபவமொன்றில் பேசுகையிலேயே அனுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பண்டாரநாயக்க பரம்பரைக்கும் இரத்த உறவு உள்ளது. நாட்டுக்காக உனது தந்தை உயிர் நீத்ததும் அக்கட்சியிலிருந்துதான். எனது தாயாரின் குடியுரிமை பறிக்கப்பட்டது. எனது சகோதரியின் கணவர் பறிக்கப்பட்டார். சகோதரியின் கண்ணொான்றும் இழக்கப்பட்டது. பண்டாரநாயக்க பரம்பரையின் தியாகங்களால் கட்டியெழுப்பப்பட்ட ஸ்ரீல.சு.கட்சியை மாற்றியமைக்க நாம் எவருக்கும் இடமளிக்கமாட்டோம்.

பண்டாரநாயக்க பரம்பரை ஒருபோதும் களவாடியதில்லை. கொலைகளைச் செய்தது இல்லை. எமது மக்களைத் தாக்கியதில்லை. எனது 30 ஆண்டு அரசியலில் நான் வெறிச்செயல்கள் புரிந்ததில்லை. எமது அரசியல் நடைமுறைகள் இவ்வாறு தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்தமொன்றை நோக்கி நகர்வதாக் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அது பற்றிய உண்மை நிலைப்பாடு எமக்குத் தெரியாது. அன்று எனது தந்தையாரால் கைச்சாத்திடப்பட்ட பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமாயின் இன்று நாட்டில் இத்தகைய நிலைப்பாடொன்று உருவாகியிருக்கமாட்டாது.



- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-206)

## ஹெல உறுமய ஏற்பாட்டில் ஆயிரம் கூட்டங்கள்

லங்காதீப

கொழும்பு,செப்.20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் ஏற்பாட்டில் ஆயிரம் பௌத்த பன்சாலைகளின் அருகில் பொதுக்கூட்டங்களை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரான அத்துரலியே ரத்னதேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் அரசியல் நிலைப்பாடு மற்றும் நாடு எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு விளக்குவதே இந்தப் பொதுக்கூட்டங்களின் நோக்கமெனவும் அத்துரலியே ரத்னதேரர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ-206)




# ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் அமைப்பை தடைசெய்வதை நோர்வே தடுத்துவிட்டது!

லங்காதீப

கொழும்பு,செப்.20

ஐரோப்பிய சமூகத்தில் இணைந்துள்ள நாடுகளிலும் விடுதலைப் புலிகள் மீது தடைவிதிப்பதற்குத் தூதரகங்கள் ஊடாக ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட முயற்சிகள் நோர்வே அரசின் தலையீடு காரணமாகத் தவிர்க்கப்பட்டுள்ளனி.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய சமூகத்தால் வெளியிடப்பட்ட் தடைவிதிக்கப்படவேண்டிய பயங்கரவாத அமைப்புகள் அடங்கிய பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் சேர்த்துக் கொள்வது தொடர்பாக முடிவெடுப்பதற்கு அண்மையில் பிரஸல்ஸ் நகரில் விசேட பிரமுகர்கள் ஒன்றுகூடினர். எனினும், நோர்வே அரசு விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றி அவர்களுக்கு விளக்கமளித்துள்ளதை அடுத்து அவ்விவகாரம் தொடர்பாகப் பேச்சுகள் பிற்போடப்பட்டுள்ளன.

ஐரோப்பிய சமூகம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளவிருந்த நடவடிக்கையை நோர்வே அரசு திரைமறைவிலிருந்து தடுத்துநிறுத்தியுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. இதன் காரணமாக சர்வதேச விதிகளை மீறுதல், தொடர்ச்சியாகப் பயங்கரவாதச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிதி சேகரித்தல் போன்ற விடுதலைப் புலிகளின் விவகாரங்கள் தொடர்பாக எதுவிதமாக பேச்சுகளும் இன்றியே கூட்டம் நிறைவுபெற்றுள்ளது.

ஐரோப்பிய சமூகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் பிரிட்டன், விடுதலைப் புலிகள் அமைப்பின் பின்புலம் மற்றும் முக்கியமாகப் பிரிட்டனில் அதன் செயற்பாடுகள் தொடர்பாகத் தகவல்களைச் சேகரித்துள்ளபோதும் பிரஸல்ஸில் கூடியுள்ள பிரமுகர்கள் முன்னிலையில் போதுமான தகவல்களை வழங்கியுள்ளதா என்ற சந்தேகம் ஆசிய - ஐரோப்பிய வலயத் தூதரகங்களிடையே உருவாகியுள்ளன.

(ஐ-296)

# ராஜபக்ஷவின் தோல்வி பற்றிக்கூறிய சோதிடருக்குக் கொலை அச்சுறுத்தல்!

இருதின

கொழும்பு,செப்.20

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைவார். அவ ருக்குக் காலம் சரியில்லை என்று ஆருடம் வெளியிட்ட சோதிடருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறமாட்டரெனவும் அதைத் தம்மால் உறுதிபடக் கூற முடியுமெனவும் முன்னறிவிப்புச் செய்துள்ள காலி மாட்டத்தைச் சேர்ந்த பிரபல சோதிட நிபுணருக்கே ராஜபக்ஷ குடும்பத்தாரிடமிருந்து பல்வேறு வகையில் அச்சுறுத்தல்களும் அழுத்தங்களும் விடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இந்தச் சோதிட நிபுணரைச் சந்திக்கச் சென்றபோது மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் தெரிவித்துள்ள கருத்துகளை 'இருதின' பத்திரிகை 'அரசியல் இரகசியங்கள்' என்ற ஆக்கத்தில் பிரசுரித்துள்ளதை அடுத்தே இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக வெற்றியடைவார் என்று கருத்து வெளியிடுமாறும் பத்திரிகைகளில் அது பற்றிய ஆக்கங்களை வெளியிடுமாறும் அந்தச் சோதிடருக்கு அழுத்தங்கள் விடுக்கப்பட்டுவருவதோடு, இந்த விவரங்கள் 'இருதின' பத்திரிகைக்குச் சென்றடைந்த விதம் பற்றித் தமக்குத் தெரிவிக்குமாறும் கோரி ராஜபக்ஷ குடும்பத்தினர் கடும்போக்கை ( ற்கொண்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலைப்பாடு காரணமாகத் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தமது அபிமானியொருவருக்குத் தெரிவித்துள்ள சோதிடர் தமது பாதுகாப்புக் கருதி தமக்கு விடுக்கப்படும் தொலைபேசி அச்சுறுத்தல்களைப் பதிவுசெய்து வைத்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

(ஐ-206)

# பிரதான கட்சிகளின் கடும்போக்கு; சிக்கல்களுக்கு அதுவே காரணம்!

## ஐ.நா.அதிகாரியின் கருத்து

லங்காதீப

கொழும்பு,செப்.20

கடந்த வியாழன் வரை யில் இலங்கையில் தங்கிருந் துள்ள ஐ.நா. செயலாளரின் விசேட பிரதிநிதியான லக்தர் பிரஹிம் இந்நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் தலைவர்களை யும் சமூக அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களையும் சந்தித்து வடக்கு - கிழக்குப் பிரச்சினை பற்றி மிகவிரிவாக அலசி ஆராய்ந்துள்ளதுடன், நாடு திரும்பு முன் னரே அப்பிரச்சினைகள் தொடர்பான தமது அடிப்படைக் கருத்துகளடங்கிய விரிவான அறிக்கையொன்றைத் தயார் செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பான இந்நாட்டில் செயற்படும் பிரதான அரசியல் கட்சிகள் பங்கம் விளைவிக்கக் கூடிய கடும்போக்கான கொள்கைகளைக் கைக்கொண்டு வருவதன் காரணமாகவே வடக்கு - கிழக்கு தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துவைக்க இயலாத அளவுக்குப் பெரும் பிரச்சினைகள் உருவாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் எனவும், இவ் விசேட அறிக்கை வாயிலாக ஐ.நா. செயலாளருக்கு இந்நிலைப்பா பற்றி அறிவுறுத்த அவர் தீர்மானித்துள்ளார் எனவும் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முஸ்லிம் மற்றும் தமிழ்ச் சமூகங்கள மத்தியில் தாம் ஓரம்கட்டப்பட்டு வருவதான நம்பிக்கை வேரூன்றியுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரஹிம், இந்நாட்டிலுள்ள பிரதானமான அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரே நோக்கோடு செயற்படும் வரை இப்பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது எனக் கூறியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

அத்தோடு, எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுறும் வரையில், இப்பிரச்சினை பற்றிய இறுதித் தீர்மானங்கள் எதையுமே மேற்கொள்ள இயலாது போகுமென அவர் கருதுவதாகவும் தெரியவந்துள்ளது.

லக்தர் பிரஹிம், உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளுக்கும் சென்று சமாதானச் செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுள்ள சிறந்த ராஜதந்திரியாவார். அத்தோடு, இவர் அல்ஜீரியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-206)

# பாதாள உலகக் கோஷ்டிகள் ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை

## பெரும் போட்டி நிலவுவதாகவும் தகவல்

லக்பிம

கொழும்பு,செப்.20

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள இரு முக்கிய வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழக்கும் விடயத்தில் பாதாள உலகக் கோஷ்டியினர் மத்தியில் பெரும் போட்டி உருவாகியுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கோஷ்டிகளிடையே விடுதலைப் புலிகளோடு தொடர்புவைத்துள்ள கோஷ்டிகளும் இருப்பதாக அத்தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் பல்வேறு அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி இவ்விரு முக்கிய அர[illegible]களுக்குள் ஏற்கனவே நுழைந்[illegible]தாகவும் பாதாள உலகைச் சேர்ந்த சில பிரபலஸ்தர்கள், மிகத் தந்திரமாக ஒரே நேரத்தில் முக்கிய இரு கட்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தமது உறுப்பினர்களை ஈடுபடுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய ஜனாதிபதியை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத்தாக்குலொன்று இடம்பெற்றுள்ளது.

அக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட குண்டுதாரி மோதரைப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல பாதாள உலகத் தலைவரொருவரின் வீட்டில் இருந்தே தாக்குதல் அங்கியை அணிந்து கொண்டுள்ளார் என்பதைப் பொலீஸ் விசாரணைகள் வெளிப்படுத்தியுள்ளன.

அப்பாதாள உலகத் தலைவர் கொழும்பிலுள்ள பிரபல அரசியல்வாதியொருவரோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப-206)

## இரத்ததானம் பயனுடையது

- உடலின் நிறை, குருதிச் செறிவு அறியப்படுகின்றது.
- உடல் நிலை ( நாடித்துடிப்பு, குருதி அமுக்கம்) சோதிக்கப்படுகின்றது.
- குருதிவகை முன்கூட்டியே அறியப்படுகின்றது.
- குடும்ப அங்கத்தவர், நண்பர்களின் குருதி தேவைக்கு உதவமுடிகின்றது.
- வைத்தியசாலையுடனான உறவு நெருக்கமாகின்றது.
- ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது.
- குடும்ப, சமூக பொறுப்புணர்வு அதிகரிக்கின்றது.

இரத்தவங்கி. போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# விண்ணக வாழ்வின்

## 31 ஆம் நாள்

ஆண்டவன் படைப்பு

ஆண்டவன் அழைப்பு

10 01 1932



21 08 2005

அமரர்

## ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம்

(இளைப்பாறிய சாரதி, யாழ்.மா.ந.ச)

"எனக்குள் இறப்பவன் என்றும் உயிர்வாழ்வான்
நானும் அவனுள் உயிர் வாழ்கின்றேன்"

ஐயா.......... ஐயா..........
பாசத்தோடு நீயிருந்தாய் ஐயா!
நேசம் காட்டி உறவுகளை அணைத்தாய் ஐயா!
செல்லக் கதை பேசி கூடியிருந்தாய் ஐயா!
சொல்லாமலே எம்மை விட்டு எங்கே சென்றாய் ஐயா?

எமது ஐயாவின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டோருக்கும், தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி அனுப்பி வைத்தோருக்கும் எம் நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் இன்று(20.09.2005)செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் கலந்து கொண்டு அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கவும்.

திருப்பலி முடிந்ததும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் தேநீர் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சென் யூட்ஸ், இளவாலை.
T.P.: 0777 462120,
077 9174260

அன்பு மனைவி,
பிள்ளைகள்(இத்தாலி,பிரான்ஸ்,டோகா,
ஜேர்மன்,சவூதி) மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40027)(52)

# சு.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகும்போது பிரதமர் செய்த ஒப்பந்தங்கள் செல்லாக்காசாகிவிடும்

## சிரேஷ்ட அமைச்சர் உறுதிபடத் தெரிவிப்பு

ஸ்ரீல.சு.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனாதிபதியினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் போது, அத்தேர்தலில் கட்சியின் வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினருடனும் ஜாதிக ஹெல உறுமயவினருடனும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செல்லாக்காசாகிவிடும் என ஸ்ரீல.சு. கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் உறுதிபடக் கூறினார்.

ஸ்ரீல.சு.கட்சி சமஷ்டி முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உறுதியாகவே இருக்கின்றது. ஒற்றை ஆட்சியின் கீழ் ஒருபோதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ் விடயத்தில் மிகவும் திடமாகவே இருக்கின்றார்.

சமாதானப் பேச்சுகளின் முக்கிய பங்காளிகளான - அனுசரணையாளர்களான - நோர்வே அரச தலைவர்களுடன் சமாதானப் பேச்சு தொடர்பாக அமெரிக்காவில் கலந்துரையாடிய ஜனாதிபதி தமது நிலைப்பாட்டை அப்போது மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஸ்ரீல.சு.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும்பணி பெருமளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இத்தேர்தல் விஞ்ஞாபனம் முற்று முழுதாக ஸ்ரீல.சு.கட்சியின் பாரம்பரியக் கொள்கைகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

அங்கே ஜே.வி.பியினதோ அல்லது ஜாதிக ஹெல உறுமயவினதோ கொள்கைகளுக்கு இடமில்லை. அவற்றைத் திணிப்பதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவார்.

கட்சியின் வேட்பாளர் கட்சிக் கொள்கையின் அடிப்படையிலேயே தேர்தல் பிரசாரங்களைக் கொண்டுசெல்லவேண்டும்.

அங்கே ஜே.வி.பியினதோ அல்லது ஜாதிக ஹெல உறுமயவினதோ கொள்கைகள் தொடர்பாகப் பேசமுடியாது.

எனவே, தனிப்பட்ட முறையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியானதும் தவிடுபொடியாகிவிடும்.

இதனையும் மீறி பிரதமர் செயற்பட ஆரம்பித்தால் அவருக்குக் கட்சியின் ஆதரவு கேள்விக்குறியாகிவிடும். - என்று பெயர்குறிப்பிடவிரும்பாத அந்த அமைச்சர் கூறினார். (எ-3)


டிஜிற்றல் போட்டோ கொப்பி

$A_4$- கறுப்பு வெள்ளை -3 ரூபா

$A_4$- கலர் 40 ரூபா

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(2/45195) (39-21-11-16)


## மரண அறிவித்தல்

### திருமதி தேவகி நடராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவகி நடராசா அவர்கள் (18.09.2005) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லையா (சிங்கப்பூர் முத்தையா)- திருமதி செல்லையா இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் இராகுலன், ரதிமோகன், ரஜனி, நளினி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பாலராமன், சுகுணவதி ஆகியோரின் சகோதரியும் நிர்மலநாதன், சரஸ்வதி, ரோசி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகந்தி - தங்கன், சுதாகரன், சுமன், சுதன், சுகன், ஜேசன், ஜேனி, அனித்தா, அனோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துவாரகன், துவாரகா, துர்க்கா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

556, கண்டி வீதி,
அரியாலை
(ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அருகில்).

தகவல்:
குடும்பத்தினர்


(40181)(21-11-16)

# 6ஆம் மாத நினைவஞ்சலி

திதி:- தசமி 20.09.2005

அன்பாலே அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு வழிகாட்டி
எம்மை ஆளாக்கி வாழ வைத்த
அன்புத் தெய்வமே! ஆறு மாதம்
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்.
புன்னகை தவழும் உங்கள் மதிமுகம்
இன்னமும் எங்கள் கண்களில்
தெரிகின்றதே – அப்பா!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!



அமரர்

## வாமதேவன் இராசரத்தினம்

தோற்றம்
19.01.1946

மறைவு
20.03.2005

பிரிவால் கலங்கி நிற்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல: 32, மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(40118) (54-



யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலைகளுக்கிடையே 17 வயதுப் பிரிவினருக்காக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை சென்.பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவர் எஸ்.கமலநாதன் , கொமர்ஷல் வங்கி உதவி முகாமையாளர் எஸ்.ஜெகதீஸ்வரன், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான் இராஜசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் -

நிகழ் வின் இறுதியாட்டத்தில் இணைச் சம்பியன்களான யாழ். மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அணித் தலைவர்கள் வெற்றிக் கிண்ணத்தைப் பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

### பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவு ஆட்டம்

# மானிப்பாய் இந்து, யாழ்.சென்றல் இணைச் சம்பியன்களாகத் தெரிவு

## வினோத், சுதர்சன் சதம் அடித்தனர்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இணைச் சம்பியன்களாகின.

பரியோவான் கல்லூரி மைதானத்தில் யாழ்.மத்திய கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடந்த இறுதி யாட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்து எட்டு விக்கெட்டுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

யாழ்.மத்திய கல்லூரியைத் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்கக் களமிறங்கிய அந்த அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப். பெற்ற நிலையில் ஆட்டநேரம் முடிவடைந்தது ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இந்தச் சுற்றுப்போட்டி விதிகளுக்கு அமைய இரு அணிகளும் இணைச் சம்பியன்களாக அறிவிக்கப்பட்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டம் இழக்காமல் எஸ்.வினோத் 112 ஓட்டங்களையும் எ.கரிகரன், ரி.யோன் பமிலன், ஐ.சியாளன் ஆகியோர் முறையே 58, 23, 21 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஆர்.டானியல் நிதர்சன் 28 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ஜே.வியாசன் 53 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், ஆர்.வினோத் குமார் 42 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், டபிள்யூ.கிறிஸ்ரி யோண்சன் 24 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், பி.சுதர்சன் 33 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

பி.சுதர்சன் 108 ஓட்டங்களையும், ஜே.டிலான் 32 ஓட்டங்களையும், கே.வினோத்குமார் 19 ஓட்டங்களையும்,டபிள்யூ.கிறிஸ்ரியோண்சன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

எஸ்.வினோத் 50 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், ஏ.கரிகரன் 36 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், என்.பிரசாந் 30 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இறுதியாட்டத்தில் சிறந்த பந்துவீச்சாளராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீரன் எ.கரிகரன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த களத்தடுப்பாளராக யாழ்.மத்திய கல்லூரி அணி வீரன் ஷெல்ரன் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதி ஆட்டத்தின் ஆட்டநாயகன் விருதினை யாழ்.மத்திய கல்லூரி அணி வீரன் எஸ்.சுதர்சன் பெற்றுக்கொண்டார்.

சுற்றுப்போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் பெஸ்ரல் கொலின் தெரிவு செய்யப்பட்டார்.

சுற்றுப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக யாழ்.இந்துக் கல்லூரி அணியின் வீரன் தவயுகன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)



ஆசிய மட்டத்தில் நடைபெறவிருக்கும் இளைஞர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட வீரர்களைத் தெரிவுசெய்யும் நிகழ்வு அண்மையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட சதுரங்கச் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் கலந்துகொண்ட வீரர்களைப் படங்களில் காணலாம். (படங்கள்: விளையாட்டுச் செய்தியாளர்)

## இன்றைய ஆட்டங்கள்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சு பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* யாழ்.மத்திய கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி (யூனியன் கல்லூரி மைதானம்).
* சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்). (3-203)

* * *

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் தனது 14ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி கழக விளையாட்டு மைதானத்தில் நடத் திவரும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பிற்பகல் 3.30 மணி - காளி அம்பாள் வி.க. எதிர் இளம் தென்றல் வி.க.
* பிற்பகல் 4.30 மணி இளம் தென்றல் வி.க. எதிர் வல்வை வி.க.

(3-202)

* * *

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு கழக மைதானத்தில் மின்னொளியில் நடை பெறவுள்ளன. மின்னொளியில் இடம்பெறும் இறுதியாட்டங்களில் பங்குபற்றும் அணி களின் விவரம் வருமாறு:

செற்றப் ஆட்டம்:

ஆவரங்கால் மத்திய வி.க. எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.

ஓவர்கேம்:

நான்கு நபர் - வல்வெட்டி குண சேகரா வி.க. எதிர் உடுப்பிட்டி சிவகுமரன் வி.க.

ஆறு நபர்:

இமையாணன் மத்திய வி.க. எதிர் உடுப்பிட்டி சிவகுமரன் வி.க.

(3-410)

## விளையாட்டு

# றோட்டரக்ட் நடத்திய சுற்றுப்போட்டியில் செலான் வங்கி வென்று சம்பியனானது

யாழ்ப்பாணம்,செப்.20

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் யாழ். மாவட்ட வங்கிகளுக்கு இடையில் நடத்திய மென்பந்து சுற்றுப் போட்டியில் செலான் வங்கி இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தினைத் தனதாக்கிக் கொண்டது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஹற்றன் நஷனல் வங்கியை எதிர்த்து செலான் வங்கி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செலான் வங்கி அணி 15 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

சாம்சன் 12 ஓட்டத்தினையும், செந்தூரன் ஆட்டம் இழக்காமல் 10 ஓட்டத்தினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

விஷ்னுவர்த்தனன் 3 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சதீஸ் 3 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சஞ்ஜீவ் 3 ஓவர் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், யோகதாஸ் 3 ஓவர் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹற்றன் நஷனல் வங்கி அணி 13.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

யோகதாஸ், உதயகுமார் ஆகியோர் முறையே 23,06 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

செந்தூரன் 3 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், சாம்சன் இரண்டு ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், பாஸ்கரன் ஒரு ஓவர் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும், சுரேந்திரன், 0.4 பந்து வீசி இரண்டு ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில், தொடர் ஆட்ட நாயகனாக ஹற்றன் நஷனல் வங்கி அணியின் வீரர் எஸ்.யோகதாஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆட்ட நாயகனாக செலான் வங்கி அணி வீரர் கொலின் சாள்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

சகலதுறை ஆட்ட நாயகனாக செலான் வங்கி அணியின் வீரர் செந்தூரன் தெரிவு செய்யப்பட்டார். (3-180)

# இந்தியா - சிம்பாப்வே 2ஆவது டெஸ்ட் இன்று

ஹராரே,செப்.20

இந்தியா - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஹராரே நகரில் இன்று ஆரம்பமாகிறது.

சிம்பாப்வே சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி இரண்டு போட்டிகள் கொண்ட ரெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. புலவாயோ நகரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. இரண்டாவது ரெஸ்ட் இன்று ஹராரே நகரில் ஆரம்பமாகிறது. இப் போட்டிக்காக இந்திய வீரர்கள், ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் பயிற்சி செய்தனர்.

அணித் தலைவர் கங்குலி, பயிற்சியாளர் கிரேக் சப்பல் இடையிலான திடீர் மோதல் காரணமாக, அணியில் குழப்பம் நிலவுகிறது. கங்குலி சிறிது நேரமே பயிற்சி செய்தார். இளம் வீரர்களுக்கு கிரேக் சப்பல் கடுமையாகப் பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தார்.

''அணியில் எந்தக் குழப்பமும் இல்லை. இந்தப் போட்டியிலும் பிரமாத வெற்றியுடன் தொடரை 2-0 முன்னிலையில் கைப்பற்றத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்,'' என்றார் அணியின் உப தலைவர் ராகுல் டிராவிட். (8)

# கங்குலி - சப்பல் முரண்பாடு; கிரிக்கெட் சபை விசாரிக்கும்

சென்னை, செப்.20

''இந்திய அணி நாடு திரும்பியதும் அணித்தலைவர் கங்குலி- பயிற்சியாளர் கிரேக் சப்பல் விவகாரம் பற்றி விரிவான விசாரணை நடத்தப்படும்'' என இந்திய கிரிக்கெட் சபை அறிவித் துள்ளது. அணித்தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு பயிற்சியாளர் கிரேக் சப்பல் என்னை நேரடியாகக் கேட்டுக்கொண்டார்' என்று கருத்துத் தெரிவித்து பரபரப்பு ஏற்படுத்தியிருக்கிறார் கங்குலி அணித்தலைவர் - பயிற்சியாளர் இடையே மோதல் வெடித்திருப்பது, கிரிக்கெட் நிர்வாகத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

'இது முக்கியமான விஷயம் இதைக் கவனமாகக் கையாளவேண்டும். இந்திய அணி இப்போது சிம்பாப்வேயில் விளையாடிக்கொண்டிருப்பதால், இந்த விஷயம் பற்றி விவாதிக்க மாட்டோம். அணி நாடு திரும்பியதும், இந்த விவகாரம் குறித்து சபைத் தலைவர் ரன்பீர் சிங் மகேந்திர நேரடி விசாரணை நடத்திமுடிவெடுப்பார்'' என்று இந்தியக் கிரிக்கெட் சபை செயலாளர் நாயர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிம்பாப்வேயில் நடந்துமுடிந்த முதலாவது ரெஸ்ட் போட்டிக்கு முன்னர் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை பயிற்சியாளர் கிரேக் சப்பல் தன்னை அணித் தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு கேட்டுக்கொண்டார் என கங்குலி செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில் நிலப்பரப்பு 4 குழி 14.16 விஸ்தீரணம் கொண்ட காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (40136)

கொடிகாமம்- பருத்தித்துறை வீதியில் சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயிலுக்கு அருகில் வீதியிலிருந்து 100m தூரத்தில் 15 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வே.சிவராஜா, மகாத்மா வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி. T.P.: 0777 698392. (40190)

## R.L. தொலைபேசி விற்பனைக்கு

R.L. தொலைபேசி விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு: 060 221 2517 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (40192)

## பணிப்பெண் தேவை

ஆசிரியர் குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை. தங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: சி.மணிவண்ணன் அம்மன் வீதி, தலங்காவில் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி கிழக்கு. T.P.: 021-222 7015, 0776618811. (40185)

## தேவை

சண்டெல் தொலைபேசி இணைப்பு ஒன்று உடனடியாகத் தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும். T.P.: 4591869, 2223831. (40182)

உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றிற்கு யாழ்.நகரப் பகுதியில் கடை வாடகைக்குத் தேவை. தொடர்பு: 077 6036332. (40199)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 அனுசம், விருட்சிக ராசி, உயரம் 5'5" மாணிறம், கிரகபாவம் 51½ M.B.B.S. மணப்பெண்ணுக்கும் 1975, ரேவதி மீனராசி, உயரம் 5'4", கிரகபாவம் 28¾ B.Com (Hons), CIMA படித்துக்கொண்டிருக்கும் மணப்பெண்ணுக்கும் டாக்டர், என்ஜினியர், எக்கவுண்டர் U.K., U.S.A. ஆஸ்திரேலிய மணமகன் தேவை. தொடர்பு: 'சிவாலயா' இல.11, யமுனாவீதி, நல்லூர். T.P.: 0776528641. (40160)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974, சித்திரை கன்னிராசி, உயரம் 5'7", 12இல் செவ்வாய், கிரகபாவம் 10½ M.B.B.S. டாக்டருக்கும் 1979 பூரம் சிங்கராசி, உயரம் 5அடி, கிரகபாவம் 88, M.B.B.S. மணப் பெண்ணுக்கும் டாக்டர், என்ஜினியர், எக்கவுண்டன், மணமகன்கள் தேவை. தொடர்பு: S.K. சிவகரன், சிவாலயா சர்வதேச திருமண சேவை நிலையம், இல.11, யமுனாவீதி, நல்லூர் (மந்திரி அரண்மனை வாயில் எதிரில்). T.P.: 077 6528641. (40159)

## தொடர்பு கொள்ளவும்

நான் வெளியூர் செல்ல இருப்பதால் என்னிடம் ஜனன சாதகக் குறிப்புகள் எழுதக் கொடுத்தவர்கள் 30.09.2005 இற்கு முன்பாகத் தொடர்புகொள்ளவும். மாம்பழம் சோதிடர் (ஸ்ரீராமர்), அச்சுவேலி. (40191)

## தவறிவிட்டது

தர்மலிங்கம் றஜீதன் என்பவருடைய வாகனப் பதிவுப் புத்தகம், இலக்கத் தகடுப் புத்தகம் என்பன 19.09.2005 அன்று மானிப்பாய் சந்திக்கும் மானிப்பாய் உதவி அரச அதிபர் பணிமனைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.சீவரத்தினம், இராசகாரியர் வீதி, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். T.P.No. 077 6167241. (40198)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்க்கும் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

*10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.*

(4/44950)

## சேமிப்புக் கழகத்தின் ஆண்டு நிறைவு விழா

ஈவினை கலைமகள் சேமிப்புக் கழகத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் ஒருமணிக்கு ஈவினை கலைமகள் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் கி.பவளராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். ஈவினைக் கிராம அலுவலர் கோ. விக்கிரமசிங்கம், ஈவினை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.செல்வப்பிரகாசம், ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.சாமுவேல், புத்தூர் கலைமதி சனசமூக நிலையத் தலைவர் கதிர்காமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (3-204)

## இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு

**அம்பிகா அம்மா**

*மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார்.*

**கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்**

உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும் உங்களின் வாழ்வில் வெற்றியும், சுபிட்சமும் அடையவும்

*அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் ஒரு முறைசந்தியுங்கள்.*

அம்மாவைச் சந்திக்கும் இடம்: 25.09.2005 வரை மட்டுமே

அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீமுருகன் ஜுவல்லாஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்)

## யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 02.10.2005 ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு கல்லூரி ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

1. இறைவணக்கம்
2. மௌன அஞ்சலி
3. தலைவர் உரை
4. புதிய உத்தியோகத்தர் தெரிவு
5. பிற விடயங்கள்
6. கல்லூரி கீதம்

எமது சங்க யாப்புக்கு அமைய சங்க அங்கத்துவர்கள் மட்டும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். சங்க உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

எமது சங்க யாப்பின் 3ஆம் பிரிவின்படி சாதாரண அல்லது ஆயுள் உறுப்புரிமைக்குரியவர்கள் தங்களுடைய உறுப்புரிமையை உறுதிசெய்து கொள்வதற்காக ''அங்கத்துவ அட்டை'' தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் அங்கத்துவ அட்டையை 26.09.2005 முதல் 01.10.2005 வரை கல்லூரியில் இயங்கும் பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் காலை 9.30 மணி தொடக்கம் 12 மணி வரை அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர் (சி/45205)(32-21-34-16) செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி இராஜேஸ்வரி கந்தசாமி** அவர்களின் அன்புத் தந்தை

**கா.மாரிமுத்து ஆச்சாரி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்.

வண்ணார்பண்ணை. (40201) (21-34-16)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் சரவணை தவராசா**

(கணக்குப் பதிவாளர் - பனை அபிவிருத்திச் சபை)

விழிமூடி ஒளியிழந்த உன் உயிர்
விடுதலை பெற்றது 17.09.2005 இல்
சகோதரனாய், சக பணியாளனாய்
சபையின் கணக்குப் பதிவாளனாய்
பகிடிகள் பலபுரிந்து பலரையும்
மகிழ்விக்கும் தவத்திருமகனாய்
வாழ்ந்த உனக்கா வந்தது சாவு
வாடுகின்றோம் உமை நினைந்து நாம்

அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

அங்கத்தவர்கள்,
பணியாளர் நலன்புரிச் சங்கம்,
பனை அபிவிருத்திச் சபை.

(40200) (21-34-16)

## மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை வரதராஜா

கொழும்புத்துறை, விபுலானந்த வீதியைப் பிறப்பிடமாகவும் இல.64, அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை வரதராஜா அவர்கள் நேற்று (19.09.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தோழர் பொன்னுத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பவதி வரதராஜா (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ) அவர்களின் அன்புக் கணவரும் புருஷோர்த், ஷங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி புஸ்பவதி வரதராஜா** (மனைவி).
**செல்வி குளரஞ்சனி** (மைத்துனி - ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

இல. 64, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(40196) (21-34-16)

# வாசகர் திருமுகம்

## மஹிந்தவும் சந்திரிகாவும் ஒரே போக்குடையவர்களே!

சந்திரிகா, மஹிந்த இருவரும் மாற்றுக் கொள்கை உடையவர்கள் என்ற கருத்தில் 11.09.2005 ஆம் திகதிப் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தீர்கள். ஆனால் அப்படியல்ல, இருவரின் கொள்கையும் இனப்பிரச்சினை பற்றிய கொள்கையும் ஒன்றுதான்.

சந்திரிகா ஐரோப்பிய இனத்தவர்களுடன், படித்த பேராசிரியர்களுடன் பழகியவர். அதனால், இதமாகப் பேசி மக்களை ஏமாற்றிக் காரியங்களைச் சாதிக்கத் தெரிந்தவர். அதனால்தான் அவர் மிதவாதி போலவும் மஹிந்த, ஜே.வி.பியினர் தீவிரவாதிகள் போலவும் நடிக்கின்றனர்.

அவர்களின் வழிநின்றால் தனது கட்சியும் சிறுபான்மை மக்களின் மதிப்பை இழக்க நேரிடும், தனது சர்வதேச செல்வாக்கு மழுங்கி விடும் என்ற காரணங்களால், மஹிந்தவை வெறுப்பது போல் சந்திரிகா நடிக்கிறார்.

ஜே.வி.பி.சமர்ப்பித்த 12 அம்சக் கோரிக்கைகள் அந்தக் கட்சியின் கொள்கையல்ல. அவை சாதாரண சிங்களப் பொது மக்களின் குமுறல். சிங்களப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் கருத்துகள். தென்னிலங்கை உள்ளூர் அரசியலில் மிகப் பிரசித்திபெற்ற கருத்துகள் ஆகையால் தான் மஹிந்த அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் எனக் கருத இடமுண்டு. இதனை விமர்சிப்பதன் மூலம் சந்திரிகா தனது செல்வாக்கை இழக்க நேரிடும். சந்திரிகாவை உதாசீனம் செய்வதால் மஹிந்தவின் வெற்றி எவ்விதத்திலும் பாதிக்கப் படமாட்டாது எனக் கருதவும் இடமுண்டு.

1956ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி மேற்கொண்ட கொள்கைதான் ஜே.வி.பி. சமர்ப்பித்துள்ள திட்டத்திலும் உள்ளது. இது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மிகவும் வாய்ப்பானது என்பதால் மஹிந்த ஏற்றிருக்கக்கூடும்.

மஹிந்தவுக்குப் பதிலாக அநுராவை நிறுத்துவது நடக்காத விடயம். அநுரா ஒரு அரசியல்வாதி அல்லர். அவர் ஒரு செல்லப்பிள்ளை, விவேகியும் அல்லர். அவர் அக்காவின் சேலையைப் பற்றிக் கொண்டு அரசியல் செய்வதற்கே தகுதியானவர். ரணில் ஜே.வி.பியின் 12 கோரிக்கைகளை தான் நேரடியாக விமர்சிக்கமாட்டார். அதனைச் சிங்களவர்களும் விரும்பமாட்டார்கள்.

ஆனால், முஸ்லிம்களின் சமயக்கொடி பச்சை. அவர்கள் எப்போதும் இனரீதியாக ஐ.தே.க.வாக்காளரே. கிறிஸ்தவர் எப்போதும் ஐ.தே.க.வுக்கே வாக்களிப்பர். இந்துக்களிலும் 50 வீதமானோரது நிலை அப்படித்தான். இந்தக்கூட்டு ஒன்றே சிங்களப் புத்தர்களை மஹிந்தவின் பக்கம் ஒன்றிணைப்பதற்குப் போதுமானது.

நல்லூர் மகேஸ்வரன்.

## மிருசுவிலுக்கான பஸ் நேரத்தை மாற்றி அமைத்து உதவுங்கள்!

தொழில் நிமித்தம் தென்மராட்சி பகுதியிலமைந்த உசன் மற்றும் விடத்தற்பளை, மிருசுவில் ஆகிய கிராமப்புறங்களிலிருந்து தினமும் யாழ்ப்பாண நகருக்கு பஸ் பிரயாணம் மேற்கொள்ள வேண்டிய எங்களில் அரச ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் தனியார் துறை ஊழியர்கள் எனப் பல தரப்பட்டோர் அடங்கியுள்ளோம்.

காலையில் யாழ். நகரிலுள்ள தொழில் நிலையங்கள், அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றுக்கு இ.போ.ச பஸ் மூலம் வந்து, மாலையில் அதே விதத்தில் எங்களது ஊர்களுக்குத் திரும்பிச் செல்ல இ.போ.ச அரச பஸ் சேவையில் மட்டுமே மாதாந்த பருவச் சீட்டுகள் சலுகை அடிப்படையில் பிரயாணத்துக்காக வழங்கப்படுவதாலும், அது எமது பொருளாதார நிலைக்கு ஏற்றபடி பிரயாணச்செலவீனத்தை கணிசமாகக் குறைக்கும் காரணத்தாலும், இ.போ.ச.பஸ் பிரயாணம் மட்டுமே என்போன்றோருக்கு அத்தியாவசிய பிரயாண மார்க்கமாக அமைகிறது.

பிரயாணிகளின் போக்குவரத்து வசதியை உரியமுறையில் ஒழுங்கு செய்து உதவவேண்டிய கடப்பாடுடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள், காலை, மாலை வேளைகளில் பிரயாண நெருக்கடியைக் கருத்தில்எடுத்து இ.போ.ச.பஸ் சேவை நேரசூசிகையை தயாரித்து நடைமுறைப்படுத்தினால் எம்போன்ற பயணிகளின் பிரயாண சிரமங்களுக்கு உதவுவதாக அமையும். மனிதாபிமான ரீதியில் அது நியாயமானதாகவும் கொள்ளப்படமுடியும்.

எமக்குரிய முக்கிய சிரமம் இதுதான். நடைமுறையிலுள்ள நேரசூசிகைப்படி, தினமும் மாலை 5.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவிலுக்கு பஸ் சேவையொன்று நடத்தப்படுகிறது. அரைமணி நேரம் கழித்து 6.15இற்கு மீண்டுமொரு பஸ்சேவை நடத்தப்பட்டு வந்த போதிலும் அண்மைக் காலமாக அச்சேவை சீராக நடைபெறுவதில்லை. அதேசமயம் 6.10இற்கு யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரை மட்டும் ஒரு சேவை நடத்தப்படுகிறது. இதற்குப் பின்னரான மிருசுவில் வரையான சேவை மாலை 6.50இற்கே யாழ்ப்பாணத்திலி ருந்து ஆரம்பிக்கப்படுகிறது.

**சிரமமளிக்கும் பிரச்சினை இதுதான்**

மாலை 6 மணிக்குக் கடமை முடிவடையும் தனியார்துறை ஊழியர்களோ, தனியார் கல்வி வகுப்பு முடிவடையும் மாணவர்களோ சாவகச்சேரிக்கு அப்பால் பயணிக்க வேண்டுமானால் ஒரு மணித்தியால நேரம் பஸ் நிலையத்தில் தாமதித்து நின்று 6.50இற்குப் புறப்படும் பஸ்ஸையே பிடிக்கவேண்டியுள்ளது. தவிர அவ்விதம் புறப்படும் பஸ் எமது கிராமங்களுக்குச் செல்லும் வேளை இருள் சூழ்ந்து விடுகிறது. பெருந்தெருவிலிருந்து ஒழுங்கைகளூடாக பயணித்து வீடு சென்றடைய வேண்டிய பயணிகள்- குறிப்பாக பாடசாலை மாணவ மாணவிகள் இதனால் பெரும் சிரமமும், அச்சமும் அடையவேண்டி உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாலை 6.15 இற்கு நடத்தி வரும் பஸ் சேவை இடையீடின்றி- தடைப்படாது நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஒழுங்கு மேற்கொண்டோ அல்லது 6.10இற்கு சாவகச்சேரிவரையான பஸ் சேவையை மிருசுவில் வரை நடத்த ஒழுங்கு மேற்கொண்டோ எம்மைப்போன்ற நடுத்தர தொழிலாள வர்க்கத்தினரின் போக்குவரத்துச் சிரமங்கள் தீர உதவக் கூடாதா? சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு இதனை நாம் ஏற்கனவே பல தடவைகள் கொண்டுவந்தும் இற்றைவரை இதற்கு அவர்களால் எதுவித நடவடிக்கை யும் மேற்கொள்ளப்படாமையால், தங்கள் பத்திரிகை மூலம் எமது சிரமத்தை வெளிப்படுத்தி உதவுவீர்களானால், அது பல தரப்புக்களின் கவனத்தை ஈர்த்து எமது பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தரும் என நம்புகின்றோம்.

-பிரயாணிகள் சார்பில் சுதன்.

# ஜேர்மன் தேர்தலில் பழைமைவாதிகள் வெற்றி!

# ஆட்சி அமைக்கப் பெரும்பான்மை இல்லை!!


அஞ்சலா மேர்கெல்


ஜெராட் ஸ்குரூடர்

பேர்லின், செப்ரெம்பர் 20

**ஜேர்மன் பொதுத் தேர்தலில் பழைமைவாதக் கட்சி வெறும் மூன்று ஆசனங்களால் வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் நாட்டில் அரசியல் அந்தகார தெளிவற்ற நிலை ஒன்று தோன்றியுள்ளது.**

**உத்தியோகபூர்வத் தேர்தல் முடிவுகளின்படி அஞ்சலா மேர்கெல்லின் தலைமையிலான பழைமைவாதிகள் கட்சி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி 35.2 சதவீத வாக்குகளைப் பெற்று 225 ஆசனங்களையும் தற்போதைய அதிபர் ஜெராட் ஸ்குரூடர் தலைமையிலான சோஷலிச ஜனநாயகக் கட்சி 34.3 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.**

தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையைப் பெறாமையினால் ஜேர்மன் அரசியலில் தெளிவற்ற நிலை ஏற்பட்டுள்ளது. யார் அடுத்த அரச தலைவர் என்ற விடயத்தில் தொடர்ந்தும் இழுபறி நிலை நீடிக்கிறது. மேர்கெல் மற்றும் ஸ்குரூடர் இருவரும் தாமே அடுத்த அரச தலைவர் என்று கூறிக்கொள்கின்றனர். ஆனால், அரசமைக்கக் கூடிய பெரும்பான்மைப் பலம் அவர்கள் இருவரிடமும் இல்லை. கூட்டணி அரசு ஒன்றே அமைக்கப்பட வேண்டியுள்ளது.

புதிய கூட்டணியை அமைப்பதில் வெற்றிபெறுபவரே அடுத்த அரச தலைவராக - ஜனாதிபதியாக - முடியும் என்று அவதானிகள் கூறுகின்றனர். இரு தலைவர்களும் அதற்காக பகீரதப் பிரயத்தனத்தை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர்.

தேர்தலுக்கு முன்னர் எடுக்கப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் மேர்கெல் நிச்சயமாக - மிகப்பெரிய வித்தியாசத்தில் -வெற்றி பெறுவார் என்று காட்டின. ஆனால், தேர்தல் முடிவுகள் தலைகீழாகி இரு தலைவர்களுக்கும் இடையே மிக நெருக்கமான போட்டியை ஏற்படுத்தியுள்ளன. எவரும் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்கமுடியாத நிலைமையும் உருவாகியுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகள் மேர்கெலுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. "எங்களுக்கு இயல்பான சிறந்த முடிவு தேவையாக இருந்தது" - என்று அவர் கூறினார். ஆனாலும் நாட்டின் முதலாவது பெண் அதிபர் என்ற அந்தஸ்தை அடையும் தனது முயற்சி முழு மூச்சுடன் தொடர்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இதற்கு எதிர்மாறான மகிழ்ச்சியான மனநிலையில் அதிபர் ஸ்குரூடர் உள்ளார். வெற்றியின் விளிம்பைத் தொட்டுள்ளதில் அவரது ஆதரவாளர்களும் மிகவும் வெற்றிக் களிப்பில் இருக்கின்றனர். மீண்டும் தாங்களே ஆட்சி அமைக்க முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். "தற்பேதைய தெளிவற்ற தேர்தல் முடிவுகளில் இருந்து அவர்கள் (கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியினர்) தாங்கள் ஆட்சியமைப்பதற்கான உரிமையை எப்படிக் கோருகின்றார்கள் என்று என்னால் விளங்கிக்கொள்ளவே முடியவில்லை" - என்று தனது ஆதரவாளர்களிடம் பேசிய ஸ்குரூடர் தெரிவித்துள்ளார். எனினும் தன்னை மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுப்பதாக இருந்தாலேயே தனது 'பெருமைவாய்ந்த கூட்டணி' பற்றி மீண்டும் சிந்திக்க முடியும்" என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

### ஜனாதிபதி பதவி மேர்கெல் அம்மையாருக்கா ஜெராட் ஸ்குரூடருக்கா?

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் கூட்டணிக் கட்சியான வர்த்தக ஆதரவு சுதந்திர ஜனநாயகக் கட்சி இந்தத் தேர்தலில் 9.8 சதவீத வாக்குகளைப் பெற்று 61 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளது. ஆனால், அரசமைக்கக்கூடிய பெரும்பான்மையைப் பெற, மேர்கெலுக்கு இது போதாது. மறுபுறத்தில் இடதுசாரிகளில் இருந்து பிரிந்து சென்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இடதுசாரிக் கட்சி 8.7 சதவீத வாக்குகளைப் பெற்று 54 ஆசனங்களையும் ஸ்குரூடரின் கூட்டணிக் கட்சியான கிறீன்ஸ் 8.1 சதவீத வாக்குகளைப் பெற்று 51ஆசனங்களையும் பெற்றுள்ளன. இவை இரண்டும் பெரும்பாலும் சோஷலிஸ ஜனநாயகக் கட்சிக்கே ஆதரவு வழங்கக் கூடும் என்று ஜேர்மன் அரசியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தேர்தலில் மொத்தம் 77.7 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. தேர்தலின் இறுதி ஆசனங்களான டெர்ஸ்டென் நகரிற்கான முடிவுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதியே வெளிவரும். ஆனால், அதிகார சமநிலையை எதிர்வு கூறக்கூடிய எந்த சமிக்ஞையையும் அது காட்டவில்லை. அங்கு வேட்பாளர் ஒருவர் இறந்ததன் காரணமாக வாக்களிப்பு தாமதமடைந்துள்ளது. (க)


மியான்மாரின் தலைநகர் யாங்கூனில் கடும் மழை கொட்டுகிறது. வெள்ளத்துக்கும் மத்தியில் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்கின்றனர். அங்குள்ள குடும்பமொன்று ரிச்சோ ஒன்றில் தமது உடைமைகளையும் கொண்டு வெளியேறுவதைப் படத்தில் காணலாம்.

# அதிகாரிகளின் எச்சரிக்கையை மீறி பொதுமக்கள் வீடு திரும்புகின்றனர்

நியூஓர்லியன்ஸ், ஒக.20

அமெரிக்காவில் 'கத்தரீனா' சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நியூஓர்லியன்ஸ் நகரில் சில இடங்களில் கடைகள் மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளன. சிலர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். மீட்பு குழுவினரின் கடும் எச்சரிக்கையையும் மீறி இவர்கள் மீண்டும் வந்துள்ளனர்.

உலக அரங்கில்

அமெரிக்காவில் கடந்த மாதம் 29ஆம் திகதி 'கத்தரீனா' சூறாவளி வீசியது. இதில் லூாசியானா மாகாணத்தில் உள்ள நியூ ஓர்லியன்ஸ் நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நகரின் 80 சதவீதப் பகுதி நீரில் மூழ்கி விட்டன. ஆயிரம் பேர் வரையிலானோர் இறந்துவிட்டனர். சூறாவளி வீசிய மூன்று நாள்களுக்குப் பிறகே மீட்புப் பணியையே அரசால் ஆரம்பிக்கமுடிந்தது.

நியூஓர்லியன்ஸ் நகரில் ஐந்து லட்சம் மக்கள் வசித்துவந்தனர். இவர்களின் பெரும்பான்மையானோர் வெளியேறிவிட்டனர். இந்நகரம் வழக்கம்போல் மீண்டும் செயல்பட மூன்று மாதங்களுக்கு மேலாகும் என்று கூறப்பட்டது. இந்நிலையில், நியூஓர்லியன்ஸ் நகர மேயர் ரே நாகின், சிறிதளவே பாதிக்கப்பட்ட பகுதிகளை சேர்ந்த மக்கள் மீண்டும் தங்கள் இருப்படங்களுக்கு வர ஆரம்பிக்கலாம் என்று தெரிவித்தார். இதற்காகவே காத்திருந்தது போல் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளனர். மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று பார்வையிட ஆரம்பித்துவிட்டனர். ஹோட்டல்கள், கடைகள் எனச் சில வர்த்தக நிறுவனங்கள் செயல்பட ஆரம்பித்துள்ளன.

நியூஓர்லியன்ஸ் நகரில் தற்போது 40 சதவீதப் பகுதி நீரில் மூழ்கியுள்ளது. அங்கேயும் தேங்கியுள்ள நீரை வெளியேற்றும் பணி நடந்துவருகிறது. இந்த நிலையில் மக்களின் மீள்குடியமர்வு மீட்புப் பணிகளையும் சிரமமாக்கும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். (க)

# அணுசக்தியைப் பயன்படுத்துவது ஈரானின் பிரிக்கமுடியாத உரிமை

## அந்நாட்டு அதிபர் ஐ.நாவில் உரை

நியூயோர்க், செப். 20

சமாதான நோக்கங்களுக்காக அணுசக்தியைப் பயன்படுத்துவது தமது நாட்டின் பிரிக்கமுடியாத உரிமை என்று ஈரானிய அதிபர் முகம்மது அஹமதி நிஜாத் கூறினார்.

யுரேனியத்தை செறிவூட்டும் பணியை ஈரான் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் விடுத்த கோரிக்கையையும் அவர் திட்டவட்டமாக நிராகரித்தார்.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

எங்கள் அணுசக்தித் திட்டம் சமாதான நோக்கங்களுக்கானது மட்டுமே. அது சட்டபூர்வமானது. அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தங்கள் எதனையும் அது மீறவில்லை. ஐ.நாவின் அணுசக்தி முகவர் நிலையங்களின் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டுத்தான் அது செயற்படுத்தப்படுகின்றது.

ஆனால், அணு ஆயுத ஒப்பந்தங்களை மீறி அமெரிக்கா தொடர்ந்தும் தன்னிடம் உள்ள அணு ஆயுதங்களைப் புதுப்பித்து வருகின்றது. அணு ஆயுதங்களைப் பொறுத்த வரையில் பாரபட்சமான கொள்கைகளை அது பின்பற்றி வருகின்றது. - என்றார் நிஜாத்.

தனது உரையின் பின்னர் அவர் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியும் அளித்தார். அதில், "அணுசக்தியைப் பயன்படுத்துவது எங்களின் பிரிக்கமுடியாத உரிமை. அதை ஒருபோதும் விட்டுக்கொடுக்கமாட்டோம். நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியமாட்டோம்" - என்றார்.

(க)

# வாக்குகளை எண்ணும் பணி ஆப்கானில் நேற்று ஆரம்பம்

காபூல், செப். 20

முப்பது வருடங்களுக்குப் பின்னர் முதல்தடவையாக நடந்து முடிந்த ஆப்கான் தேர்தலில் வாக்குகளை எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் இன்று முதல் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் காணப்பட்ட வாக்களிப்பு வீதத்தையும் விடக் குறைவாகவே இம்முறை வாக்களிப்பு வீதம் இருந்தது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால், சில பின்தங்கிய இடங்களிலும் சிறிய நகரங்களிலும் காலையில் வாக்களிப்பு மந்தமாக ஆரம்பித்தாலும் பின்னர் வேகமெடுத்தது.

தேர்தல் தின வன்முறைகளில் பிரான்ஸ் சிப்பாய் உட்பட 6 பேர் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டனர். ஆனால், இந்த வன்முறைகள் தேர்தல் வாக்களிப்பில் மிகச் சிறிய பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளன என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வன்முறைகள் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

முன்னதாக வாக்களித்த ஆப்கான் அதிபர் ஹமீத் ஹர்ஸாய், "இன்று ஆப்கானுக்குச் சிறப்பான நாள்" என்று தெரிவித்தார். "ஆப்கான் மக்கள் தமக்குத் தேவையானது மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளார்கள். அவர்கள் ஒரு குறிக்கோளைக் கொண்டுள்ளார்கள். தங்களுடைய அந்த எதிர்பார்ப்புக்காக அவர்கள் வாக்களித்துள்ளார்கள்." - என்றார் கர்ஸாய்.

அமெரிக்கர்களால் ஆப்கானிஸ்தான் கைப்பற்றப்பட்ட பின்னர் உலக நாடுகளால் தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகவே இப்போது ஆப்கானிஸ்தானில் பொது மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. (க)


*யாழ்.றோட்டறிக் கழக சின்னம் சூட்டும் விழா நேற்றுமுன்தினம் மாலை 'உதயன்' கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட றோட்டறிக் கழக மாவட்ட ஆளுநர் நிஹால் போஹகலந்த, திருமதி சாவித்திரி நிஹால் போஹகலந்த ஆகியோரை வரவேற்கும் முகமாக இடம்பெற்ற வரவேற்பு நடனத்தையும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். யாழ்.றோட்டறிக் கழக முன்னாள் தலைவர் றோட்டேறியன் ஈ.சரவணபவன் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் என்.சரவணபவன் தலைமை உரை நிகழ்த்துவதையும் இரண்டாவது மூன்றாவது படங்களில் காணலாம். சின்னம் சூட்டுவதற்காக யாழ்.றோட்டறிக் கழக புதிய உறுப்பினர்களான ப.சிவர்மசர்மா (ஹற்றன் நஷனல் வங்கி), எஸ். அனுராஜ் (நிர்வாக இயக்குநர், நிலவு.கொம்), சுதர்சன் (யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளர்), தாசியஸ் ஜூட் பிளேவியன் (யூனியன் அஷுரன்ஸ் விற்பனை நிறைவேற்று அதிகாரி), வண. லலித் (சேன்ஜோன்ஸ் தேவாலய உதவிப் பொறுப்பமைக் குரு) ஆகியோர் றோட்டறிக் கழக மாவட்ட ஆளுநரால் மேடைக்கு அழைக்கப்பட்டிருப்பதைக் கடைசிப் படத்தில் காணலாம். (படங்கள்: பகீரதன்)*

# யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை குருதிக் கொடையாளிகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததானம் செய்யும் வடமாகாணத்தைச் சேர்ந்த தன்னார்வ குருதிக் கொடையாளிகள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

இலங்கைத் தேசிய குருதிமாற்று பிரயோக சேவையினர் இந்தக் கௌரவிப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

எனவே, தொடர்ச்சியாக இரத்ததானம் செய்யும் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களை இந்தக் கௌரவிப்பு விழாவுக்குத் தவறாது சமுகம் அளிக்குமாறு இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி கேட்டுள் ளார்.

சமுகமளிக்கும்போது இரத்த வங்கியினால் வழங்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை தம்முடன் எடுத்து வரவேண்டியது அவசியம் என்றும் - அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இரத்ததானம் வழங்குவோரைக் கௌரவிப்பது வரலாற்றுக் கடமை என்று இது விடயமாக விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ)

# ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ளாத பெண் அரச ஊழியருக்கு டிசெ.31 வரை சந்தர்ப்பம்

அச்சுவேலி,செப்.20

ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ளாத பெண் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் ஓய்வூதியர் திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பெண் ஊழியர்களுக்கு தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு 1983ஆம் ஆண்டுமுதல் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. 1983ஆம் ஆண்டில் இருந்து அரச சேவையில் நியமனம் பெறும் பெண் அரச ஊழியர், ஆசிரியர்களுக்கு ஆண்களைப் போல மாதாந்தம் சம்பளத்தில் ஓய்வூதியத்திற்கான கட்டணம் அறவிக்கப்படுகின்றது.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் சேவையில் இணைந்து இதுவரை தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்ளாத ஊழியர்கள் தமது சுயவிருப்பத்தின் அடிப்படையில் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு டிசெம்பர் 31ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கையினை உள்நாட்டு அலுவல்கள் பொது நிர்வாக அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

புதிதாக இணைத்துக் கொள்ளும் பெண் ஊழியர்கள் ஓய்வூதியர் திட்டத்திற்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை அவர்களது மாதாந்த ஊதியத்தில் இருந்து பகுதிபகுதியாகச் செலுத்துவதற்கு சந்தர்ப் பம் வழங்கப் பட்டுள்ளது.

(எ-111)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 23 - 05 - 1945

விண்ணில் 01 - 10 - 2004

அமரர் **முத்துக்குமாரு இலட்சுமிகாந்தன்**

திதி: 20-09-2005

நீங்கள் எம்மைவிட்டு மறைந்து போனாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மாறா.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

**மனைவி,**
**குடும்பத்தினர்.**

(40214) (24-46-11-34)

# மானிப்பாய் இந்துவில் கட்டடம் புனரமைப்பு

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலுள்ள மஸ்கன் சுப்பிரமணியம் ஞாபகார்த்த கட்டடம் தற்போது புனரமைப்புச்செய்யப்பட்டு வருகின்றது.

இப்புனரமைப்பு வேலைகளுக்கென கொழும்பிலுள்ள மஸ்கன் மற்றும் அஸ்பெஸ்டாஸ் நிறுவனத்தினர் மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியைக் கல்லூரிக்கு வழங்கியுள்ளனர் எனக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தெரிவித்தார். கணனிக் கற்கைக்கான நிலையமாகவும் மாணவர்களுக்கான மேலதிகக் கல்வி வலுவூட்டல் நிலையமாகவும் இந்த மண்டபம் பயன்படுத்தப்படவுள்ளதாக அவர்மேலும்தெரிவித்தார். (எ-135)

# யாழ்.பெரியகடையில் சிறுவர் கழகம் உதயம்

யாழ்.பெரியகடை மாதர் அபிவிருத்திச்சங்கம், சிறுவர் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளது. கன்னாதிட்டி சயன்ஸ் ஹோலில் இடம்பெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி இந்திராணி தங்கராஜா தலைமை வகித்தார்

இக் கூட்டத்தில் விருந்தினராக யாழ். பெரியகடைப் பிரிவு கிராமசேவையாளர் எம்.ஆர். கே..ரட்ணராஜா கலந்துகொண்டார்.

சிறுவர் கழகத்தின் தலைவியாக ரி.தாட்சாயினியும் செயலாளராக த.ருஷாந்தினியும் பொருளாளராக க.கிஷாந்தினியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக் கூட்டத்தில் 60 இற்கும் மேற்பட்ட சிறுவர்களும் சிறுமிகளும் கலந்து கொண்டனர்.(3-202)

## முதலாம் ஆண்டு நினைவலைகளில்... / ஆறாம் மாத நினைவலைகளில்...





மண்ணில் 01 - 11 - 1939 / விண்ணில் 19 - 09 - 2004

திருமதி வே.கனகம்மா

மண்ணில் 27 - 01 - 1926 / விண்ணில் 29 - 03 - 2005

அமரர் க.வேலாயுதபிள்ளை
(ஓய்வூதியர், இலங்கை மின்சாரசபை)

வையத்துள் வாழ்ந்த வாழ்வு போதுமென்றோ
வானுலகம் சென்றுவிட்டீர்?
மானிட வாழ்வு உள்ளவரை -நாம்
மறவோம் எம் தெய்வங்களை!

தகவல்: கே.சிவகுமாரன்
(எழுது வினைஞர், யாழ்.பல்கலைக்கழகம்).
45,புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

பாசமுடன் நினைவு கூரும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(40152)(46-11-34)

## நெஞ்சை விட்டகலா நினைவில்

24ஆம் ஆண்டு



அமரர் வ.ஐயாத்துரை

மலர்வு:- 01-12-1927
உதிர்வு:- 01-12-1982

4ஆம் ஆண்டு



அமரர் ஐ.ஜெயராசசிங்கம்
(உப தபாலதிபர், மந்துவில்)
08-03-1959
04-05-2001

2ஆம் ஆண்டு



அமரர் ஐ.இராஜகுலசிங்கம்
(தபால் ஊழியர், கொடிகாமம்)
19-11-1963
13-10-2003
(தேய்பிறை திருதியை)

பாலை வனத்தில் பூக்கள் மலர்ந்தாலும்
எங்கள் முகங்களில் இனி ஏது மகிழ்ச்சி
சூரியன் திசை மாறி மறைந்தாலும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையா.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

(40207)(46-11-34)

**-குடும்பத்தினர்.**


# IDM (Pvt) Ltd.

Jaffna Branch

Walk In Interview

Wanted a Computer Lecturer (Multimedia) for our Jaffna Branch

The Computer Lecturer Should have the following qualifications

- B.Sc. or Higher Diploma in Multimedia field
- One year Experience
- Age: above 25
- Date of Interview: 22-09-2005 (Thursday) 9: a.m.

No. 216, Navalar Road, Jaffna.
T.P: 021 4591393
(#45204)(38-46-11-34)



## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் மீள் கேள்வி அறிவித்தல்

எமது நகராட்சிமன்றத்தினால் வேலைகள் தொடர்பாக 01-09-2005இல் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் காலம் கீழ்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.


1. கேள்வி படிவம் வழங்கல்: 22-09-2005 பி.ப. 2. மணி
2. கேள்வி ஏற்றுக்கொள்ளல்: 23-09-2005 நண்பகல் 12. மணி
3. கேள்வி திறத்தல் : 23-09-2005 பி.ப 1. மணி

**நா.தம்பிராசா, செயலாளர்,**
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்றஅலுவலகம்,
வல்வெட்டித்துறை.-15-09-2005 (சி/45206)(46-11-34)




## காணவில்லை



இல.67, குடியேற்றத் திட்டம் நாவற்குழியைச் சேர்ந்த திருமதி **கவிதா மாட்டீன்** வயது 35, உயரம் 5' 5" கறுப்புநிறம். 5பிள்ளைகளின் தாயை கடந்த 15-08-2005 முதல் காணவில்லை. இவரைப் பற்றி தகவல் அறிந்தோர் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**அலோசியஸ் ஹென்றி,**
இல.67, குடியேற்றத் திட்டம்,
நாவற்குழி. (40203)(46-11-34)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பகுதித் தலைவர்

திருமதி புஸ்பவதி வரதராஜா

அவர்களின் அன்புக் கணவர்

**பொன்னுத்துரை வரதராஜா**

அவர்கள் 19-09-2005 திங்கட்கிழமை காலை இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.**

(40212)(46-11-34)

## கண்ணீர் அஞ்சலி



எமது பீட மாணவி

செல்வி மலர்விழி சிவலிங்கம்

(2ஆம் வருடம் முகாமைத்துவபீடம்)

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழகம்.**

(40213)(21-46-11-34)

### கம்பஹா நகரில் நேற்று

# ஒருவரைச் சுட்டுக் கொலைசெய்து 20 லட்சம் ரூபா பணம் கொள்ளை

## பட்டப்பகலில் பலர் பார்த்திருக்கக் கொடூரம்

இருபது லட்சம் ரூபா பணத்துடன் வங்கிக்குச் சென்ற வரை சுட்டுக்கொலை செய்துவிட்டு அவர் வசமிருந்த பணப் பொதியை பலர் பார்த்திருக்க அபகரித்துச் சென்றனர் கொள்ளையர். இந்தத் துணிகரச் சம்பவம் கம்பஹா நகரில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

கம்பஹா பொலீஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து, அதன் அருகில் இருக்கும் வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்காக ஊழியர் ஒருவரால் எடுத்துச்செல்லப்பட்ட 20 லட்சம் ரூபா பணமே மோட்டார் சைக்கிலொன்றில் வந்த ஆயுதபாணிகளால் இவ்வாறு அபகரிக்கப்பட்டது. பணத்தை எடுத்துச் சென்ற ஊழியர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

மீரிகமையைச் சேர்ந்த மகிந்த லக்ஷ்மன் என்பவரே இவ்வாறு கொலையுண்டவராவர்.

கடந்த விடுமுறை தினங்களில் வங்கி மூடப்பட்டிருந்ததால் மேற்படி எரிபொருள் நிலையத்தில் 20 லட்சம் ரூபா பணம் சேர்ந்திருந்தது. இதை எப்படியோ அறிந்துகொண்ட கொள்ளையர்கள் பணத்தைக் கொள்ளையிடுவதற்கு திட்டம் வகுத்து நேற்று அதைக் கனகச்சிதமாக முடித்துள்ளனர்.

கம்பஹா நகரில் மிகவும் சன சந்தடி நிறைந்து காணப்படும் பிரதான இடத்தில் வைத்தே கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டிவிட்டுச் சென்றுள்ளனர். கம்பஹா பொலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தென்மராட்சி மாணவர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி

சாவகச்சேரி,செப்.20

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே ஆக்கக் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் ஏற்கனவே பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிகளில் தெரிவான ஆக்கங்களே காட்சிப்படுத்தப் படவுள்ளன.

இக்கண்காட்சிகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களது கண்காட்சி நாளை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் இடைநிலை உயர்தர மாணவர்களது கண்காட்சி நாளை மறுதினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ள ஆரம்பப் பிரிவுக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி சுப்பர் மார்க்கட் பொறுப்பாளர் ரி. குகனேசனும் - சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் கண்காட்சியில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. றெ.இருதயநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ -31 - 117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பைந்தமிழ் வெதுப்பகம் சாவகச்சேரி

*சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி விழாவில் சிறந்த வெதுப்பகத்திற்கான விருதினை பெற்றதையிட்டு அதன் உரிமையாளர் திரு.ந.சற்குணராசா அவர்களையும் ஊழியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.* (40230)

**ருவிங்கிள் ஸ்ரார், யாழ்ப்பாணம்.**


## நெற்செய்கை குறித்த கூட்டம்

வலி.தென்மேற்கு,செப்.20

சில்லாலை விவசாயிகள் சம்மேளனம் நடத்தும் இந்த வருட காலபோக நெற் செய்கை தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. சம்மேளனத் தலைவர் இமானுவல் ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தொல்புரம் கமநல சேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கலந்துகொள்வார். நெல் விதைப்பில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் என்பன குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

(ஒ-135)

பரி.தோமாவின் கல்லூரி, கல்கிசை தமிழ் இலக்கிய மன்றம் நடத்தும்

## அகில இலங்கை தமிழ்த்திறன் காண் மற்றும் விவாதப் போட்டிகள் -2005

பரி.தோமாவின் கல்லூரி கல்கிசை தமிழ் இலக்கிய மன்றம் இவ்வருடம் தனது வைரவிழா கொண்டாட்டங்களையொட்டி நாடு முழுவதும் பரந்திருக்கும் தமிழ் மாணவரை ஒருமிக்கச் செய்து தத்தம் தனித்தமிழ்த்திறன்களை வெளிக்கொணரும் முகமாக அகில இலங்கை ரீதியில் தமிழ்த்திறன் காண் மற்றும் விவாதப்போட்டிகள் 2005 ஐ செந்தமிழ் அன்னையின் நாள் தொட்டு நடத்த்வுள்ளது.

போட்டி விவரங்கள்:

- கட்டுரை
- சிறுகதை
- கவிதை
- பேச்சு
- தனியிசை
- ஆங்கிலக் கட்டுரை

மேற்படி போட்டிகள் கீழ்ப்பிரிவு (தரம் - 6,7,8), மத்திய பிரிவு (தரம்- 9,10), மேற்பிரிவு (தரம் -12,13) ஆகிய 3 பிரிவுகளில் நடைபெறும்.

மேலும் அகில இலங்கை தமிழறிவுப் போட்டியும் விவாதப் போட்டிகளும் திறந்த போட்டிகளாக நடைபெறும்.

மேற்படி போட்டிகள் 01.10.2005 அன்று காலை 8.31 மணிக்கு பரி.தோமாவின் கல்லூரி மண்டபத்தில் வெகுசிறப்பாக அரங்கேறும் என அனைத்து பாடசாலைகளுக்கும் தெரியத் தருகின்றோம். போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் 31.01.1986 இற்குப் பின்னர் பிறந்தவர்களாக இருக்கவேண்டும். 28.09.2005 இற்கு முன்னர் தம் வரவை உறுதிப்படுத்தும் வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கு தங்குமிட, உணவு வசதிகள் இனிதே ஒழுங்கு செய்துதரப்படும். இந்த தோமிய முயற்சியை ஊக்குவிக்குமாறும் நாடெங்கிலும் தமிழ்ப்பெருமை பரவுவதற்காகவும் அனைத்து பாடசாலைகளையும் இந்த அகில இலங்கை போட்டிகளில் கலந்துசிறப்பிக்குமாறு பணிந்து நிற்கின்றோம்.

உங்கள் வரவை உறுதிசெய்யும் பொருட்டு,

**தொடர்புகளுக்கு:**

Fax: 011 4528840
ATTN: SECRETARY,
TAMIL LITERARY ASSOCIATION,
S.THOMA'S COLLEGE, Mr.LAVINIA

(சி 45210)(29-17-15)

திரு. K.V.Kuggatharan (பொறுப்பாசிரியர்) தொ.இல. 011 2593107
M.F.Im. ran (தலைவர்) தொ.இல. 011 2729708
V.S.AJANTHAN(பொருளாளர்) தொ.இல. 011 2363211

### தவறிவிட்டது

அரியாலை ச.ச. நிலையத்திற்கும் நாவலர் வீதிக்கும் இடையில் கறுப்பு கைப்பை உள்ளே முக்கியமான அவசர தேவைக்குரிய G.C.E. A/L சித்தியடைந்த மகாலிங்கம் அரவிந்தனின் சான்றிதழ் தவறிவிட்டது. எடுத்து தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஒப்படைக்கவேண்டிய இடம்:
K.மகேஸ்வரன், 24, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (40222)


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
நியூபுகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த

**அன்பே ஆருயிரே**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

மணிகண்டன், சிம்ரன், ஜெய் ஆகாஷ் மற்றும் பலர் நடித்த

**கிச்சா வயது 16**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி 45363)

**மனோகரா** யாழ்ப்பாணம்

சிம்பு, கோபிகா நடித்த

**தொட்டி ஜெயா**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30. (சி 44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

ரவிகிருஷ்ணா, கோபிகா, ரேவதி நடித்த

**பொன்னியின் செல்வன்**

காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.). (சிக்னல்)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சரஸ்வதி கனகரட்ணம்

அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியறிந்து மிகவும் மனவருத்தமடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு, எம் இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக அர்ப்பணிக்கிறோம். (40233)(29-17-15)

G.S. லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனத்தாரும் ஊழியர்களும் பெரியகடை, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன விரிவுரையாளர் து.இராமஜெயம் அவர்களின் அன்புத் தந்தை

### க.துரைகிளி

அவர்கள் காலமானார். (40232)(29-17-15)

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வி - கல்விசாரா ஊழியர் சமூகம், யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனம்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிவலிங்கம்

**(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர், இ.மி.சபை, சுன்னாகம்)**

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் அவர்கள் நேற்று (19.09.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமசாமி - இராசலட்சுமி தம்பதியரின் மருமகனும் பாலிய அருணாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குணமலர் மற்றும் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற முருகையா மற்றும் தருமராசா, காலஞ்சென்ற ஜெயராஜசேகரம் மற்றும் ஞானப்பூங்கோதை, காலஞ்சென்ற சேனாதிராசா மற்றும் துருபதி ஆகியோரின் மைத்துனரும் சுந்தரம்பிள்ளை, கனகேஸ்வரி, தையல்நாயகி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூந்தோட்டம்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (40234)(29-17-15)

தகவல்: **குடும்பத்தினர்.**

### சோமசுந்தரஜயர் நடராஜக்குருக்கள்

**(கைலாச பிள்ளையார் கோயில் ஆஸ்தான குரு)**

சோமசுந்தரஜயர் நடராஜக்குருக்கள் நேற்று (19.09.2005) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் விஜயகுமாரிஅம்மாவின் கணவரும் அனந்தலக்ஷ்மி, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் மாணிக்கராஜசர்மாவின் மாமனாரும் பாலசுப்பிரமணிய குருக்கள், மஹாகணபதிக் குருக்கள், சித்திராங்கி ஆகியோரின் சகோதரரும் சோதிநாதகுருக்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சட்டநாதர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (20.09.2005) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (சி-45213)(29-17-15)

தகவல்: **மனைவி விஜயகுமாரி அம்மா**

### கணபதி துரைகிளி

**(முன்னாள் சாரதி, இ.போ.ச.)**



வேலியந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி துரைகிளி 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் த.மதிவதனா (ஆசிரியர், யா/வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் பாடசாலை), ற.ஜெயவதனா (ஆசிரியர், யா/ கொற்றாவத்தை அமெரிக்க மிசன் பாடசாலை), து. இராமஜெயம் (விரிவுரையாளர், யா/உயர்தொழில்நுட்ப நிறுவனம்), சந்திரவதனா ( ஆசிரியர் , ம/சித்தாண்டி விநாயகர் வித்தியாலயம்), இந்திரவதனா, றதிவதனா, செல்வவதனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வ.தயானந்தா (கிராம அலுவலர், சமரபாகு), யோ.றமேஸ் பாபு (லண்டன்), இ.சுபாசினி (ஆசிரியர், யா/சரஸ்வதி வித்தியாலம், மட்டுவில்) ஆகியோரின் அருமை மாமனாரும் யோகராசா - மல்லிகை கண்டு, காலஞ்சென்ற இரத்தினம் - சந்திரகண்டு ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.09.2005) திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளன்குளம் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலியந்தோட்டம்,
வல்வெட்டி. (40231)(29-17-15)

தகவல்: **குடும்பத்தினர்.**

# விடுதலைக்காகப் போராடும் அனைவராலும் இனிமேல் 'பிரபாகரனிஸம்' பின்பற்றப்படும்!

## காவல்துறைப் பொறுப்பாளர் பிரான்ஸில் உரை



கொழும்பு, செப். 20

நாளைய வரலாறுகளில் விடுதலைக்காகப் போராடும் மக்கள் அனைவராலும் 'பிரபாகரனிஸம்' பின்பற்றப்படும் என்று தமிழீழகாவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் கூறினார்.

பிரான்ஸில் நடைபெற்ற 'விடுதலைப் பேரொளி' நூல் வெளியீட்டு விழாவில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் மற்றும் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஆகியோர் ஆற்றிய உரைகள் திரையில் காண்பிக்கப்பட்டன.

பா. நடேசன் தனதுரையில் கூறியதாவது:-

எமது உயிரினும் மேலாக மதிக்கப்படும் எமது தலைவர் குறித்த வரலாறானது, தமிழீழப் போராட்ட வரலாறாகவும் நீண்டு செல்லும் ஒன்று.

உலகில் விடுதலைப் போராட்ட வரலாறு அவற்றை நிகழ்த்திய பல தலைவர்களது வரலாறாகவும், அவர்களின் தேச வரலாறாகவும், விரிந்து செல்வதைப் போன்றதே இதுவும்.

தென்னாபிரிக்காவைகட்டி எழுப்பிய வரலாறு நெல்சன் மண்டடேலாவின் வரலாறாகவும், நெல்சன் மண்டேலாவின் வரலாறு, தென்னாபிரிக்காவின் வரலாறாகவும் விரிவதைப் போல் எமது தேசியத் தலைவருடைய வரலாறும் அத்தகைய பண்புகளைக் கொண்டது.

ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் கெரில்லாப்போராட்டமாக வளர்ந்து, மக்கள் போராட்டமாக மலர்ந்து, இன்று தமிழீழத் தனி அரசை நிறுவும் கால கட்டத்தில் வந்துநிற்கிறது. விடுதலைப் போராட்ட காலத்திலேயே சமூக விடுதலைக்கான கட்டமைப்புக்களையும் முன்னெடுத்துச் சென்றார் நமது தலைவர்.

விடுதலைக்காகப் போராடும் மக்கள் அனைவராலும் 'பிரபாகரனிஸம்' நாளை படிக்கப்படும்.

அவருடைய போர்நெறி, விடுதலைத் தீர்க்க தரிசனம், ஆளுமை என்ற பல்வேறு விடயங் கள் ஆய்வுக்குள்ளாகும் - என்றார் நடேசன்.

சிறப்புத்தளபதி கேணல் விதுஷா தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

விடுதலைப் போராட்ட காலத்தில் அவர் எங்களுடன் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள் சிலவற்றையே நான் பதிந்திருக்கிறேன்.

மக்களின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் எமக்கு இன்னும் அதிகமாக வேண்டும் சகல திறமையும் வாய்ந்த தலைவர் எமக்கு வாய்த்திருக்கிறார்.

விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்ற சிந்தனை மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும்.

ஏழ்மையில் வாழும் சிறார்களின் கல்வியை நாம் வளர்க்க வேண்டும். உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் அவர்களை வளர்க்க வேண்டும்.

இப்பணியை எல்லாம் சுமந்து செல்லக் கூடிய போராளிகள் வேண்டும் என அக்கறை கொண்டு நிற்கும் உயரிய தலைவர் எம்மை வழிநடத்துகிறார்.

அவர் குறித்த 'விடுதலைப் பேரொளி' எனும் நூல் விடுதலைப் போராட்டத்திற்கு பயனுள்ள செயற்பாடு என்றார் அவர். (க)

## முல்லை எழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாய்வுப் பணியகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு விமானப்படை தெரிவித்திருக்கிறது.

''விடுதலைப் புலிகள் தமது பிரதேசத்தில் நடப்பவை எல்லாவற்றையும் நேரடியாக இணையத்தள இணைப்பு மூலம் வன்னியிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அவர்களின் 'ரி.ரி.என்.' ஒளிபரப்புச் சேவையில் தினசரி வன்னியிலிருந்து அஞ்சல் செய்யப்படும் ஒரு மணி நேர நிகழ்ச்சி அன்றன்றே ஒளிபரப்பப்படுகின்றது. இந்நிலையில் புலிகளின் பிரதேசத்தில் நாம் சேகரித்த நிகழ்ச்சி பற்றிய செய்தியைத் தடுத்து வைப்பதன் மூலம் அரச படையினர் என்ன சாதிக்கப் போகின்றார்களோ தெரியவில்லை.''

- என்று சம்பந்தப்பட்ட ஒருவர் தெரிவித்தார். (க)

## புளொட் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் சென்ற பிரஸ்தாப நபரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுட்டு விட்டுத் தப்பிவிட்டனர் என்றும்-

மூன்று காயங்கள் இவரின் உடலத்தில் காணப்பட்டன என்றும்- தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் சடலத்தைப் பார்வையிட்ட பின் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின் வவுனியாவில் இடம்பெற்ற 26 ஆவது கொலைச் சம்பவம் இதுவாகும்.

## 3 பொலீஸாரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மூன்று பொலீஸாரின் உறவினர்கள் அடங்கிய எழுவர் கொண்ட குழுவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இன்று கிளிநொச்சிக்கு அழைத்து வருகின்றது.

பொலீஸாரைப் பார்வையிட்ட பின்னர் அவர்கள் ஓரிரு தினங்கள் வன்னியில் தங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## ஜே.வி.பி. - ஹெல உறுமய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் அதிருப்திக்குள்ளாகியிருக்கும் ஜே.வி.பியினர்,வாக்குப்பலம் குன்றிய நிலையிலுள்ள ஹெல உறுமய முன்வைத்திருக்கும் முன் நிபந்தனைகளால் பெரும்பான்மையான சிங்கள மக்கள் அச்சத்திற்குள்ளாகியிருக்கின்றனர் எனவும்-

இது ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்தவின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்குமெனவும்-

மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் இரகசியமான முறையில் ஆலோசனை வழங்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

எவ்வாறாயினும் ஹெல உறுமயவுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள நிலையில் ஜே.வி.பி. அழுத்தத்தை ஏற்று ஹெல உறுமயவை ஓரங்கட்டமுடியாமல் தர்ம சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கும் பிரதமர் மஹிந்த, ஜே.வி.பி யினரைத் திருப்திப்படுத்துவதற்காக தாம் கலந்துகொள்ளும் பொதுக் கூட்டங்களில் ஜாதிக ஹெல உறுமயவை கலந்துகொள்ளச் செய்யாதிருக்க முடிவெடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இன்று கொழும்பில் பிரதமர் மஹிந்தவுக்கு ஆதரவாக நடைபெறும் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு இடமளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

ஆனால், இதற்கிடையில் ஜாதிக ஹெல உறுமய வேறு மாதிரி கருத்துக் கூறுகின்றது.

''ஜாதிக ஹெல உறுமய தொடர்பில் கருத்துக் கூறுவதற்கு ஜே.வி.பியினருக்கு எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது. உண்மையில் ஜாதிக ஹெல உறுமயவிற்குத்தான் மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு இருக்கிறது. ஜே.வி.பியினருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை என்றுதான் கூறவேண்டும்.''

-இவ்வாறு உறுதியாக கூறிவிட்டார் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வண. எல்லாவல மேதானந்த தேரர்.

ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் மஹிந்த தேர்தல் ஒப்பந்தமொன்றைச் செய்தமை குறித்து ஜே.வி.பி. வெளியிட்டுவரும் அதிருப்தி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவிற்கு மக்கள் ஆதரவு இல்லையென தெரிவிக்கப்பட்டு வரும் விமர்சனங்கள் குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமக்கு மக்களிடையே ஆதரவில்லை, செல்வாக்கில்லையென்று ஜே.வி.பியினர் கூறமுடியாது.

அப்படியானால் ஜே.வி.பியினருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லையென்று நாம் கூறவேண்டிவரும் எமது பலத்தை அறிந்துதான் பிரதமர் எம்முடன் ஒப்பந்தமொன்றைச் செய்திருக்கிறார். அது எமக்கும் பிரதமருக்கு மிடையே உள்ள விடயம். இதைப் பற்றி எந்தக் கருத்தையும் கூற ஜே.வி.பியினருக்கு உரிமையில்லையென்பதை கூறிவைக்க விரும்புகிறேன்.

-இவ்வாறு வண. எல்லாவல மேதானந்த தேரர் மேலும் கூறினார்.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருக்கிறது.

பொங்குதமிழ் சமூகத்தின் சார்பில் இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாளை புதன்கிழமையன்று பூரண கதவடைப்பு நடத்தி எமது ஒன்றுபட்ட எதிர்ப்பினை ஸ்ரீ லங்கா அரசிற்கு தெரிவிப்பதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு ஸ்ரீ லங்கா அரசு தமிழ் பேசும் மக்களுக்கெதிராகச் செய்யும் அட்டூழியங்களை அம்பலப்படுத்துவோம்.

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தல் திருவிழா நடைபெறும் போது பேரினவாத சக்திகள் தங்களுக்கிடையே நடத்தும் சகல குழப்பங்களும், வன்முறைச் சம்பவங்களும் இறுதியில் தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கப்படும். எனவே, திருகோணமலையிலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை வாபஸ் பெறச் செய்வதற்கு அகிம்சை வழியில் வன்முறைகளுக்கு இடம் கொடாது தொடர்ந்தும் போராடுவோம். இதற்கு உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடனும் தாழ்மையுடனும் வேண்டுகிறோம் - என்றுள்ளது. (க)

## முக்கிய அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறார். இதன்படி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இந்த அமைச்சரின் செயற்பாடுகள், கொள்கைத் திட்டங்கள் குறித்தான பகிரங்க விமர்சனங்களை ஜே.வி.பியினர் வெளிப்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஆஸ்திரேலியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவருகிறது. வவுனியா பிரகடனத்துக்கு ஆஸ்திரேலிய அரசின் ஆதரவைப் பெறும் நோக்கத்தில் இந்த நிகழ்வு நடத்தப்படுவதாகவும் -

இதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## தேர்தல் பிரசாரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய அமைச்சர்கள், சுதந்திரக் முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

தற்போது வெளிநாட்டுக்குச் சென்றிருக்கும் சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது எழுந்திருக்கும் பரபரப்பான சூழ்நிலையில் இன்றைய கூட்டத்தில் பிரதமர் மஹிந்த தமது அரசியல் நிலைப்பாடு குறித்து முக்கியமான கருத்துகளை வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. (ஞ)

## நவம்பர் 17இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரை நேற்று அரச அச்சகத்தில் வர்த்தமானியில் அச்சிடப்பட்டது. தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இரு பிரதான கட்சிகளும், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான ஆயத்தங்களை உடனே மேற்கொள்ளக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை அதன் தேர்தல் விஞ்ஞாபனம் அறிவிக்கத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியவுடன் வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை, இத்தேர்தலுக்கு அடுத்தநாள் - நவம்பர் 18ஆம் திகதி - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினம் என்பது குறிப்பிடத்தக்கது. (க)


## ஒத்துமாறல்

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் பட்டதாரி நூலக ஆசிரியராக நியமனம் பெற்ற ஒருவர், யாழ். பிரதேசத்துக்குள் அல்லது A-9 பாதைக்கருகில்உள்ள பாடசாலைக்கு ஒத்துமாறவிரும்புகிறார்.

தொடர்புகள்:-க.இராசதுரை,
சிவன்வீதி,
ஆவரங்கால்.
TP:. No:. 0777 589703
(40205)(17)



சிறப்பான பராமரிப்புடன்




அடைப்புகள் படிவுகள்

கத்தி போன்ற எப்பாவனையுமின்றி நாங்கள் உங்களை கையாளுகின்றோம்.


FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company
Level 5/East Tower/1C, World Trade Centre, Colombo -01.
Phone : 0094-11-5517897, 5551879, 5558442 Fax : 0094-11-5517756
E-mail : fp;vtl@lankabellnet.com
Website : www.fppvtl.org - AVAILABLE ONLINE
திறந்திருக்கும் நேரங்கள்:- கிழமை நாட்கள் மு.ப. 9.00 பி.ப. 5.00 மற்றும் சனிக்கிழமை மு.ப. 9.00 பி.ப. 2.00



THE LEADING INDIAN IT COLLEGE
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
INDIA - SRI LANKA
அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
50% OFF
INTERNET & E-MAIL 1,000/= (1 WEEK ONLINE CLASS)
OFFICE AUTOMATION
DESKTOP PUBLISHING
PHOTO MIXING 2,500/=
PROGRAMMING
HARDWARE
MULTIMEDIA 22,500/= (ONE YEAR - 6 COURSES)
HIGHER DIPLOMA IN AUTOCAD 6000/=
ஆரம்பம்: 17,18,24,25 -09-2005
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
021-4590222 etouch@wow.lk


## மரண அறிவித்தல்

### செல்லையா நவரட்ணம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நவரட்ணம் அவர்கள் நேற்று (19.09.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/18, செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(40235)(29-12-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.